PUBLIC LIBRARY
JAFFNA

விலை ரூ. 3-00 PMG's LICENCE No; WPP-136

# ஈழ சுதந்திரன்
# ELASUTHANTIRAN



திருவள்ளுவராண்டு ௨௦௩௩
சித்திரை-வைகாசி
மே-2002
புத்தகம்: 15 இதழ்: 5

- இனப் பிரச்சினைக்குத் தீர்வாக தமிழ் மக்கள் தங்கள் முடிவை 1977லேயே கூறிவிட்டனர்
- வட்டுக்கோட்டைத் தீர்மானமும் 1977 தேர்தலில் தமிழ்மக்களின் ஏகோபித்த தீர்ப்புமே அது
- தமிழருடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை ஒருதலைப்பட்சமாக மீறியது சிங்கள அரசுகளே!

## இடைக்கால ஆட்சி அல்ல, ஈழத்துக்கு
## மாற்றாக விக்கிரமசிங்க வைக்கும்
# திட்டம் என்ன?

### ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் கேள்வி

**தமிழ் மக்களின் அடிப்படை உரிமைக் கோரிக்கையை சிங்கள அரசியல் வாதிகள் 'இனப்பிரச்சினை' என்று கூறி இழுத்துக் கடத்துகின்றனர். புலிகளை முன்னிறுத்தி அதை 'பயங்கரவாதப் பிரச்சினை' என்பதாகவும் காட்ட முற்பட்டனர்.**

**தமிழ் மக்களைப் பொறுத்தவரை வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலமும், 1977 தேர்தல் தீர்ப்பின் மூலமும் தங்களின் ஏகோபித்த முடிவைத் தெளிவாகக் கூறி விட்டனர்.**

**அதற்கு சிங்களத் தரப்பின் மாற்றுத் திட்டத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன் வைக்க வேண்டுமே தவிர, இடைக்கால ஆட்சி பற்றி புலிகளுடன் பேசுவதாக இருக்கக் கூடாது. அத்தகைய மாற்றுத் திட்டம் என்ன என்பதைச் சொல்வார்களா?**

**இவ்வாறு ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் கேள்வி எழுப்பியுள்ளது. இது பற்றி அது வெளியிட்டிருக்கும் அறிக்கை வருமாறு:**

இன்று இலங்கையில் நடந்து வந்த உள்நாட்டுப் போர் நின்று, அதற்காக சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானதும் முழு அமைதி திரும்பிவிட்டதைப் போல அனைத்துத்தரப்பிலும் ஆரவாரம் காட்டப்படுகிறது.

போரினால் அன்றாடம் உயிரிழப்புகளும் பொருட் சேதங்களும் நடந்து கொண்டிருந்த ஒரு நாட்டில் ஏற்பட்ட இத்தகைய அமைதி வரவேற்கப்படுவது இயல்பானதே.

அதே வேளை சிறிலங்கா சிங்கள அரசு நடைபெற்றுக் கொண்டிருந்த உள்நாட்டுப் போருக்குக் காரணமான இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை, தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு ஈடு கொடுக்கும் நல்ல தீர்வை, நிலைத்து நிற்கக்கூடிய சட்டபூர்வமான தீர்வை முன்வைத்தாலன்றி இந்த அமைதி நீடிக்க முடியாது.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை 1976ஆம் ஆண்டு நிறைவேற்றிய வட்டுக் கோட்டைத் தீர்மானத்தின் மூலமும், 1977ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் தீர்ப்பின் மூலமும் தங்களுடைய கருத்தை-முடிவை ஐயந்திரிபற உலகத்தின்முன் வைத்து விட்டனர்.

அதாவது, சிங்களப் பெரும்பான்மையினரின் அரசு தமிழ் மக்களுடன் செய்து கொண்ட எந்த ஒப்பந்தத்தையும் நிறைவேற்றவில்லை ஒருதலைப்பட்சமாகவே கிழித்துப் போட்டு விட்டது. அத்துடன் தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலமும், ஒடுக்குமுறை மூலமும் தமிழினத்தை வேரறுந்த சமுதாயமாக்கி விரட்டிவிடப் பார்க்கிறது. அதனால் சிறீலங்காவிலிருந்து பிரிந்து தமிழீழத் தனிநாடு அமைப்பதே எங்கள் தீர்ப்பு என்று அவர்கள் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தி விட்டனர்.

சிறீலங்கா அரசோ இலங்கை பிரிவுபடக்கூடாது; ஒன்றுபட்ட ஒரு நாட்டுக்குள்ளேதான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாக வேண்டும் என்று சொல்கிறது.

தமிழர்கள்ஒன்றும் எடுத்த எடுப்பிலேயே பிரிவினை கேட்கவில்லை. தமிழீழத் தனிநாடு கோரவில்லை. சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ்ந்து கொண்டே தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டத்தான் தமிழ் மக்கள் மனதார விரும்பினார்கள். அதன் காரணமாகத்தான் எவ்வளவோ விட்டுக் கொடுத்து சிங்கள அரசுகளோடு ஒப்பந்தம் கண்டார்கள். எதுவும் சரிவரவில்லை என்பதால்தான் முப்பதாண்டுப் போராட்டத் திற்தப்பிறகு மேற்படி முடிவுக்கு வந்தனர்.

அவர்களாகவே வந்தனர் என்பதைவிட சிங்கள இனவாத ஆட்சியும் மக்களும் அவர்களை அந்த முடிவுக்குத் தள்ளினார்கள் என்பதே உண்மையாகும்.

தமிழர்கள் எடுத்த சாத்வீக சத்தியாக்கிரகப் போராட்டங்கள் மதிக்கப்படாததாலும் அவர்களை நசுக்க முற்பட்டதாலுமே தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தனர். அப்போராட்டமும் முப்பதாண்டைக் கடந்த பின்பும், இடைவிடாத போரால் இலங்கைப் பொருளாதாரமே பாழ்பட்டு, இலங்கையே சீர்கெட்டு விட்டதைக் கண்ட பிறகு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்போம் என்று சொல்லும் சிறீலங்கா, தமிழ் மக்களின் தீர்ப்பை அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லும் பொழுது தகுந்த மாற்றுத் திட்டத்தை முன் வைக்க வேண்டுமா இல்லையா?

அத்தகைய ஒரு மாற்றுத் திட்டம், தமிழ் மக்களுடைய அபிலாசைகளை நிறைவு செய்யக் கூடிய ஒரு மாற்றுத் திட்டம் சிறீலங்கா அரசுகளால் முன் வைக்கப்படாததாலேயே பேச்சுவார்த்தைகள் முறிந்து போயின.

ஆனால் மாற்றுத் திட்டம் எப்படி இருக்க வேண்டும் என்பதை இந்தியா முன்னிலையில் முன்பு நடந்த திம்புபேச்சுவார்த்தையிலும் சரி; மற்றப் பேச்சுவார்த்தைகளிலும் சரி; தமிழர் தரப்பால் நன்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

1) ஈழத் தமிழினம் ஒரு தனித் தேசிய இனம் என்பது ஒப்புக் கொள்ளப்பட வேண்டும்.

2) வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பாரம்பரியத் தாயகம் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

3) தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை ஒப்புக் கொள்ளப்பட வேண்டும்.

4) இலங்கை முழுவதிலும் வாழும் தமிழர்களின்

(16-ம் பக்கம் பார்க்க)



தந்தை செல்வா திருவுருவச் சிலை முன் வே. கயிலாய பிள்ளை, சா.செ. சந்திரகாசன், ச. முத்துக்குமரன், ஓவை நடராசன், திருமதி மணிமேகலைக்கண்ணன், இரா. சனார்த்தனம். (செய்தி இரண்டாம் பக்கம்)

**ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்**

''தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான் செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி''

-அறநெறிச்சாரம்

(கெடுதல் செய்யும் பகைவனும் நன்மை செய்யும் நண்பனும் தனக்குத் தானே ஆவான், பிறர் அல்லர். சென்ற-இன்றைய சுக துக்கங்களைத் தனக்குத் தேடிக் கொள்பவனும் தானே ஆவான். தான் செய்த வினையின் பயன்களையும் தானே அனுபவித்தலால், தான் செய்த வினைகளுக்குச் சான்றாகக் கூடியவனும் தானே ஆவான். வேறு சான்று வேண்டாம். தனி மனிதனுக்குச் சொன்ன இந்நீதி சமுதாயத்திற்கும் பொருந்தும்தானே!)

## தெளிவு

# கொழும்புத் தலைமையின் டெல்லி முகாம்!

ஈழத்தமிழர் தரப்பில் புலிகள் செய்த சில தவறுகளால் ''அவர்களுக்கு உதவக் கூடாது'' என்றும், ''புலிகள் தலைவரைக் கைது செய்து இந்தியாவுக்குக் கொண்டு வர வேண்டும்'' என்றும், ''சிறீலங்கா அரசின் மூலம் அதைச் செய்ய முடியவில்லையென்றால், இந்திய இராணுவத்தை அனுப்பி அதைச் செய்ய வேண்டும்'' என்றும் பலவாறாக இந்தியாவில் கருத்து வெளியாகும் நிலையில், ''இலங்கைக்கு உதவ வேண்டும்தான்'' என்ற கருத்து மட்டும் எல்லாத் தரப்பிலும் இருக்கின்ற காரணத்தால், சிங்களத் தலைவர்கள் டெல்லியின் நல்லெண்ணத்தைப் பெறுவதில் போட்டி போட்டுக்கொண்டு முன்னிற்கிறார்கள்.

அதிலும் கொழும்புத்தலைமை, குறிப்பாக இன்றைய ஆளுங்கட்சி, பிரதான எதிர்க்கட்சித் தலைவர்கள் டெல்லியை வளைய வளைய வந்து கொண்டிருக்கிறார்கள். அதாவது டெல்லியில் தமிழர் தரப்புப் பெற்றிருக்க வேண்டிய அனுதாபத்தையும் ஆதரவையும் சிங்களத் தரப்பு தட்டிக் கொண்டுபோக முன்னிற்கிறது.

சந்திரிகாவின் (முன்னாள்) வெளிநாட்டு மந்திரி கதிர்காமர் முன்பு வாஷிங்டனுக்கும், லண்டனுக்குமாகப் பறந்து கொண்டிருந்தவர், இப்போது சென்னைக்கும் டெல்லிக்குமாகவே பறந்து கொண்டிருக்கிறார். அவருடைய பிரதான முகாம் டெல்லியாகவே இருக்கிறது ஜனாதிபதி சந்திரிகாவும்22-4-2002ல்நேரடியாகவே டெல்லியில்முகாமிட்டு இந்தியத் தலைவர்களையெல்லாம் சந்தித்துப் பேசினாராம்.

ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி சும்மாவா இருக்கும்? அது அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்களை டெல்லியில் முகாம் போடச் சொல்லிவிட்டதாம். பேராசிரியர் பீரிசும் இப்போது டெல்லித் தலைவர்களையெல்லாம் ஒரு சுற்று சந்தித்து விட்டாராம். பற்றாததற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜூன் மாதத்தில் டெல்லிக்கும் சென்னைக்கும் செல்லப்போகிறாராம்.

ஆனால் தமிழர் தரப்பில் இத்தகைய முயற்சிகள் தளங்கொள்ளாதிருப்பது துரதிர்ஷ்ட வசமாகும்,

நார்வே, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு என மேற்கு நாடுகளின் ஆதரவைப் பெறுவது ஒரு புறம் இருந்தாலும், இந்தியாவின் ஆதரவையும், தமிழ் நாட்டின் ஆதரவையும் கட்சி பேதமின்றிச் சம்பாதிப்பதும், தக்கவைத்துக் கொள்வதும் ஈழத் தமிழ் மக்களுக்கு இன்றியமையாததாகும்.

புலிகள் மீது நல்லபிப்பிராயம் இல்லையென்றால், ஏனைய தமிழ்க்கட்சிகளின் மூலம் அதைச்செய்யப் புலிகள் முன்வர வேண்டும்.

தங்களையல்லாமல் எதுவும் நடக்கக்கூடாது என்ற எண்ணத்தில், தங்களை ஒதுக்கி வைக்கிறார்கள் என்பதற்காக இந்தியாவின் ஆதரவை தமிழர் தரப்புக்குச் சம்பாதித்துக் கொள்ளாமல் இருப்பது இந்தியாவில் சிங்களத் தரப்பு காரியம் சாதித்துக் கொள்ள இடம் கொடுப்பதேயாகும்.

மத்தியஸ்தத்தில் ஈடுபட்டிருக்கும் நார்வேயேதான் ஒரு சுதந்திரநாடாக இருந்தும் கூட தன் சமாதான முயற்சிக்கு இந்தியாவின் ஆதரவைப் பெறுவதில் முனைப்புக் காட்டுவதைக் கண்ட பிறகும், ஈழத்தமிழர் தரப்பில் அவ்வித அக்கறை காட்டப்படாதது வருந்தத் தக்கதாகும்.

என்னதான் உலக ஆதரவு இருந்தாலும், சிங்களத் தரப்புப் பேசித் தீர்த்துக் கொள்ள முன் வந்தாலும் அண்டையிலிருக்கும் இந்தியா, ஆறுகோடித் தமிழர்களைக் கொண்ட தமிழ்நாடு சாதகநிலையிலிருக்க வேண்டியது சமாதானம் நிலைபெற அத்தியாவசியமானது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

உரியவர்கள் இதுபற்றிச் சிந்திப்பார்களாக!

# தந்தை செல்வாவின் 104வது பிறந்தநாள்-சிலைதிறப்பு-நூல்வெளியீடு-முப்பெரும் விழா

### சென்னை ஈ.ஏ.ம.க, தலைமையகத்தில் நடந்தது

தமிழீழத்தந்தை சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்களின் 104வது பிறந்தநாள் விழா-அவரது மார்பளவு சிலை திறப்பு விழா மற்றும் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் கலாநிதி சி.க. சிற்றம்பலம் எழுதிய 'ஈழத்தமிழர் தொன்மை' என்ற நூல்வெளியீட்டு விழா ஆகிய முப்பெரும் விழா 2-4-2002 அன்று மாலை 3-30 மணிக்கு, சென்னை எழும்பூரில் உள்ள ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகக் கருத்தரங்க மண்டபத்தில் ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகத்தின் சார்பில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

ஈழப்பண் மற்றும் தந்தை செல்வா நினைவாஞ்சலிப் பாடல்களுடன் தொடங்கிய இவ்விழாவுக்குத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ஔவை து. நடராசன் தலைமை தாங்கினார்.

முனைவர் அரு. கோபாலன் அனைவரையும் வரவேற்க, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ விசுவநாதம் அவர்களின் திருமகள், தமிழகப் புலவர் குழுவின் பொருளாண்மைக்குழுச் செயலாளர் திருமதி மணிமேகலைக் கண்ணன் அவர்கள் சிலை திறப்பை நடத்தி வைத்தார். (முதலில் முன்னாள் நாம் தமிழர் இயக்கத் தலைவர் சி.பா. ஆதித்தனார் அவர்களின் மூத்தமகன், 'தேவி' வார இதழின் ஆசிரியர் பா. இராமச்சந்திர ஆதித்தனார் அவர்கள் அதைச் செய்வதாக இருந்தது. அன்று காலை தூத்துக்குடியில் அவருடைய சம்பந்தி அம்மாள் காலமானதால் அவரால் வர இயலவில்லை.)

அடுத்து, பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் ச. முத்துக்குமரன் அவர்கள் 'ஈழத் தமிழர் தொன்மை' நூலை வெளியிட, அதன் முதல் பிரதியை ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் செயலாளர் செல்வி சூரியகுமாரி பெற்றுக்கொண்டார். அந்நூலின் ஆய்வுரையை பன்னூலாசிரியர் புலவர் அனு. வெண்ணிலா ஆற்றினார்.

உலகத்தமிழர் பேரவைத் தலைவர் இரா. சனர்த்தனம், இலங்கை நடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வே கயிலாயபிள்ளை, செல்வி சூரியகுமாரி, அருட்திரு. சாம். கோயில்பிள்ளை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தந்தைசெல்வா சிலையை உருவாக்கிய சிற்பி புல்லுமலை நல்லரத்தினம் அவர்களைப்பற்றிய குறிப்புரையை சக்காரியாஸ் வழங்க, கழகத்தின் சார்பில் அவருக்குப் பொன்னாடை அணிவிக்கப்பட்டு. பொற்கிழி வழங்கப் பட்டது.

மாவட்டத் தொண்டர் லோ. பிரியந்தன் ''வரம் தா செல்வா'' எனும் தலைப்பில் கவிதைஒன்றை வழங்கினார்.

அடுத்து நெல்லை மண்டலத்தைச் சேர்ந்த த.கணேஷ், செ. ஜீவஉதயன், ம. கனகசுந்தரம், செல்விகள் எஸ். யோகேஸ்வரி, அ. வனிதமலிகா, ந. சசிகலா திருமதி ரொ. மெஜிற்றா ஆகியோரைக் கொண்ட குழுவினர் ''ஈழவர் வாழ்க்கையில்'' எனும் தலைப்பில் அம்மா என். கண்ணூரான் எழுதிய நடைச்சித்திரத்தை வழங்கினர்.

அன்பு செல்வராஜ், மாணிக்கவாசகர், சுரேஷ்



துணைவேந்தர் ச. முத்துக்குமரனிடமிருந்து 'ஈழத் தமிழர் தொன்மை' நூலை ஓர் அன்பர் விலை கொடுத்துப் பெற்றுக் கொள்கிறார். இரா. சனார்த்தனம், ஔவை நடராசன், திருமதி மணிமேகலைக்கண்ணன், ஐயா சந்திரகாசன் உடன் உள்ளனர்.

அடுத்து திருச்சி மண்டலத்தைச் சேர்ந்த வெ. ஜூட் பிரேம்குமார். ம. பாலகிசிதரன், ச. ஜோன்சன், ந. மகேந்திரன், சே. செல்வரத்தினம், எஸ். சிறிவாணி, ஜே. மரியகொறற்றி குரூஸ், சீ. கவிதா, தெ. கெஜவதனி ஆகியோரைக் கொண்ட குழுவினர் ''தந்தை செல்வாவின் சரித்திரப் புதுமை'' என்ற தலைப்பில் வில்லிசை வழங்கினர். அதனை எழுதித் தயாரித்து திருமதி கந்தவேள் மேற்பார்வை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து, ஈரோடு மண்டலத்தைச் சேர்ந்த சசிகரன், விக்கினேஸ்வரன், ஜெகன், திருமதி ராஜி, செல்விகள் சாந்தகுமாரி, உஷா, ருக்மணிதேவி மற்றும் திருமதி கிளமென்ட் ஆகியோரைக் கொண்ட கலைக்குழுவினர் தந்தை செல்வா நினைவுக் கலை நிகழ்ச்சி நடத்தினர்.

கண்ணா, நாகராஜ், திருமதி அகிலா, திருமதி பிரிஜ்ஜெட், செல்விகள் அமுதா, மலர்மகள், சுபாஷினி, வளர்மதி ஆகியோரைக் கொண்ட கலைக்குழுவினர் இடையிடையே தந்தை செல்வா நினைவுப் பாடல்களை நெஞ்சுருக வழங்கினார்கள்.

இறுதியாக ஈழத்தந்தை செல்வாவின் மைந்தவும், ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகத்தலைவருமான சா.செ. சந்திரகாசன் அவர்கள் இன்றைய ஈழத்தின் நிலைமைகளையும் பன்னாட்டு அரசியல் சூழலையும் விளக்கிப் பேருரையாற்றியதுடன் விழாவில் கலந்து கொண்ட அத்துணை பேர்களுக்கும் நன்றியுரை கூற விழாஇனிது நிறைவடைந்தது.

(அவருடைய பேருரை அடுத்தஇதழில் இடம்பெறும்.

மு. பரம், ச. நடேசலிங்கம், சுந்தரபாண்டியன், சாமுவேல் ஆகியோரின் மேற்பார்வையில் கழகத் தொண்டர்கள் இந்த முப்பெரும் விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். சென்னை, திருச்சி, ஈரோடு, நெல்லை மண்டலங்களைச் சேர்ந்த ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத் தொண்டர்கள் ஆண்களும் பெண்களும் ஆர்வமாகத் திரண்டு வந்து விழாவில் கலந்து கொண்டனர் வெளியில் உள்ள பெருமக்களும், பத்திரிகையாளர்களும் கணிசமாக வந்து கலந்து கொண்டது விழாவைச் சிறப்பித்தது.

(விழாவில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களின் உரைகள் தனித்தனியே இடம் பெறுகின்றன- ஆசிரியர்.)

PUBLIC LIBRARY

## ஒரு குறளை உணர்வோம்

# மனிதன், தேவனாக திருவள்ளுவர் காட்டும் இலகுவழி

-: அருகோ: -

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

திருக்குறள் : 50

பரிமேலழகர் : வாழ்வாங்கு வையத்துள் வாழ்பவன்-இல்லறத்தோடு கூடிவாழும் இயல்பினால் வையத்தின் கண் வாழ்பவன்; வான் உறையும் தெய்வத்துள் வைக்கப் படும்- வையத்தானேயெனினும் வானின்கண் உறையும் தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படும் என்றவாறு.

பின் தேவனாய் அவ்வறப்பயன் நுகர்தல் ஒருதலையாகலின் 'தெய்வத்துள் வைக்கப்படும்' என்றார். இதனால் இல் நிலையது மறுமைப்பயன் கூறப்பட்டது. இம்மைப் பயன் புகழ். அதனை இறுதிக்கண் கூறுப.

மணக்குடவர் : இல்வாழ்க்கை வாழும்படியிலே வாழுமவன், உலகத்திலே தேவருள் ஒருவனாக மதிக்கப்படுபவன் என்றவாறு.

அவன் எல்லோராலும் நன்கு மதிக்கப்படுபவன் என்றவாறு.

பரிதியார் : பூமியிலே இல்லறம் நடத்தும் முறையாலே நடப்பவன், தேவர்க்கு நிகராவன் என்றவாறு.

டாக்டர் மு. வ. : உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன், வானுலகத்தில் உள்ள தெய்வமுறையில் வைத்து மதிக்கப்படுவான்.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் : (கடவுளை அடைய வேண்டும் என்று தானே துறவறத்துக்குப் போகிறார்கள்? துறவறத்துக்குப் போகாமலே) உலகத்தில் வாழ வேண்டிய முறைப்படி குடும்பவாழ்க்கை நடத்துகிறவன் வேறு முயற்சியில்லாமலும் வானத்தில் இருக்கிற தெய்வத்தோடு சேர்க்கப்படுவான்.

தேவநேயப் பாவாணர் : இவ்வுலகத்தில் இல்லறத்து வாழும் முறைப்படி வாழ்கின்றவன், இவ்வுலகத்தானேயாயினும் வானுலகிலுள்ள தேவருள் ஒருவனாக வைத்து மதிக்கப்படுவான்.

பேரா. பே. சு. கோவிந்தராசன் : உலகில் மக்கள் வாழவேண்டிய அறநெறியில் என்றும் நிலையாக நின்று வாழ்கின்றவன், மக்கள் உலகில் புகழ் பெற்றோர்க்கு ஒப்பாக உயர்ந்து, சிறந்தோர் வரிசையில் ஒருவனாகவாழும் உயர்வைப் பெற்றுச் சிறப்பிக்கப்படுவான்.

அருகோ : வையத்துள்-உயிர்களைத் தனக்குள்ளே தாங்கியிருக்கும் உலகத்தில்; வாழ்வாங்கு-எப்படி வாழ வேண்டுமோ அப்படி; வாழ்பவன்-வாழ்ந்து நிற்பவன்; வான் உறையும்-மிக உயர்ந்த இடத்தில் நிலைத்திருக்கும்; தெய்வத்துள்-கடவுளர்வரிசையில்; வைக்கப்படும்-வைத்து மதிக்கப்படுவான்.

திருக்குறளைத் தொகுத்தவர்கள் இக்குறட்பாவை 'இல்வாழ்க்கை' என்ற அதிகாரத்தில் வைத்துள்ளதால் 'இல்வாழ்க்கை வாழும்படியிலே வாழுபவன்' எனக்கொண்டு உரையாசிரியர்களால் பொருள் கூறப்பட்டுள்ளது.

ஆனால், 'வாழ்வாங்கு வாழ்பவன்' என்று திருவள்ளுவர் செப்புவது இல்லறத்தில் மட்டுமல்ல, ஒருவன் தோன்றும் ஒவ்வொரு துறையிலுமே வாழ்வாங்கு வாழ்ந்து காட்டுவதையே குறிக்கும்.

அப்படி வாழ்ந்து காட்டுபவர்கள்தான்-வாழ்ந்து காட்டியவர்கள்தான் சராசரி மக்களுக்கு மேம்பட்ட கடவுளர்களாக மக்களால் கொண்டாடப்படுபவர்களாவர்.

'வான்' என்பது ஒரு குறித்த இடத்தை, அதாவது ஒரு கோளை, மலையை, முகிலை மட்டும் சுட்டுவதல்ல, எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி, உயர்ந்து, விரிந்து, பரந்து, நிலைத்து நிற்பதையே சுட்டி நிற்பதாகும். வாழ்ந்து காட்டிய சிறப்பால்-புகழால் கடவுளாக உயர்ந்தவர்களும் அப்படிப்பட்ட காலத்தை வென்ற பெருமைக்குரியோர் என்பதாலேயே அவர்கள் வானில் உறைபவர்களாக வைக்கப்பட்டனர்.

ஆக, கடவுளர் என்போர் வேறுயாருமல்லர், வாழ்ந்து காட்டி வரலாறு படைத்தோரே. வானைப்போல அவர்களும் நிலைத்து நிற்பவர்கள் என்பதாலேயே அவர்கள் வானுறையும் தெய்வம் எனப்பட்டனர்.

இக்குறட்பா மூலம் திருவள்ளுவர் செப்பும் நீதி என்னவென்றால், ''ஏ மாந்தனே! நீ வாழ்வாங்கு வாழ்வாயானால் நீதான் கடவுள். மக்களால் என்றென்றும் மதிக்கப்படுவாய்'' என்பதாகும்.

---

வடக்கு முஸ்லிம்களை நிபந்தனையின்றி

# உடனடியாக மீளக் குடியமருமாறு அழைப்பதே புலிகளின் கடமை

**கட்சி செயற்குழுக் கூட்டத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீம்**

விடுதலைப் புலிகளின் அழைப்பை ஏற்று முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் அவர்களுடன் பேச முன் வந்திருக்கின்றது. அத்துடன் வடக்கில் முஸ்லிம்களை மீண்டும் வந்து குடியேறுமாறு அவர்கள் அழைப்பு விடுத்ததையும் நாம் வரவேற்கிறோம். ஆனால் சமாதானம் ஏற்பட்டு நிலைமை வழமைக்குத் திரும்பிய பின்னர் அவர்கள் அங்கு திரும்பி வந்து வாழலாம் என்பதில் ஒருவிதமான நிச்சயமற்ற தன்மை இழையோடுவதாக உணர்கிறோம். நிபந்தனைகளின்றி காலம் தாழ்த்தாது முஸ்லிம்களை உடனடியாகவே அங்கு வந்து வாழுமாறு அழைப்பது அவர்களது தார்மிக கடமையாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கட்சியின் செயற்குழுக் கூட்டம் ''தாருஸ்ஸலாம்'' தலைமையகத்தில் நடைபெற்றபோது அதில் விசேட உரை நிகழ்த்துகையில் இவ்வாறு கூறினார்.

நாடெங்கிலுமிருந்து 350க்கும் மேற்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களும் வட-கிழக்கிற்கு வெளியே உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற அறுபத்து எட்டு உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். அமைச்சர் நூர்தீன் மசூர், பாராளுமன்ற உறுப்பினர்களான டாக்டர் ஏ.எல். ஹப்ரத் (பொதுச் செயலாளர்), எச்.எம்.எம். ஹரீஸ் அன்வர் இஸ்மாயில், திடீர் தௌபீக், எம்.எஸ் தௌபீக் மற்றும் மசூர் மௌலானா, கே.ஏ. பாயிஸ், ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

முசுலிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது :-

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் இதய சுத்தியோடு அமைய வேண்டும். கசப்புணர்வுகளைக் களைந்து பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் விதத்தில் பேச்சுக்கள் அமைவது அவசியம்.

காலம் தாழ்த்தியாவது விடுதலைப்புலிகள், வடகிழக்கு பிரதேசம் முசுலிம்களினதும் பாரம்பரியத்தாயகம் என்ற உண்மையை ஏற்றுக் கொண்டிருப்பதை வரவேற்கின்றோம். வடக்கிலிருந்து முசுலிம்களை வெளியேற்றியது பெரும் அரசியல் தவறு என்றும் அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

விரட்டியடிக்கப்பட்ட முசுலிம்கள் அங்கு மீளச் செல்லும்போது சுயகௌரவமாக வாழவே விரும்புகிறார்கள்.

வடக்கிலிருந்து முசுலிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதிலிருந்து பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள். புலிகளால் ஏற்பட்ட உபாதைகளைப் பற்றி பேசுகிறோம். ஆனால் அவர்களின் உபாயங்களைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

சமாதானத்திற்கான காலம் கனிந்திருக்கின்றது. வன்னிக்குச் சென்று புலிகளின் தலைமைத்துவத்தோடு கைலாகு கொடுப்பதோடு எமது காரியம் முடியப்போவதில்லை. ஆரம்பம்தான் அது தொடர்ந்து பேசி பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைக்காண வேண்டியிருக்கிறது.

அந்தரங்க சுத்தியோடும் மனந்திறந்து பேசவேண்டும். முசுலிம்கள் வடக்கிற்குத் திரும்பிச் சென்று வாழ்வது போலவே பேச்சுவார்த்தைகளின்பயனாக அதிகாரப்பகிர் ஏற்படும்போது அங்கு வாழும் முசுலிம்களும் தமக்குரிய பங்கைப் பெறுவதற்கும் வளங்களை உரிய முறையில் பகிர்ந்து அனுபவிப்பதற்கும் வழி செய்யப்பட வேண்டும். அவர்களும் சுயநிர்ணய உரிமையுடையவர்களாக இருக்க வேண்டும்.

புலிகளுடன் பேசுவது போலவே ஸ்ரீலங்கா முசுலிம் காங்கிரசு அரசாங்கத்துடனும் பேசும், அரசாங்கத்திற்கும் எங்களுக்கும் இடையில் எழுத்து மூலமான உடன்பாடு உண்டு.

திம்புக் கோட்பாட்டிற்கு மாற்றீடான ஒரு கோட்பாடு பற்றியும் நாம் அரசாங்கத்துடன் பேசுவோம்.

ஆட்சியில் அமர்வதற்கு ஆறு ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டியிருந்த ஐக்கிய தேசியக் கட்சியை முசுலிம் காங்கிரசு ஓராண்டிற்குள் ஆட்சியில் அமர்த்தியிருக்கின்றது.

எங்களுக்கு மத்தியில் சிலருக்கு விரக்தியும் விசனமும் இருக்கிறது. கட்சியைப் பொறுத்தவரை சேதமில்லாத விட்டுக் கொடுப்பிற்கு நாம் என்றும் தயாராக இருக்கின்றோம்.

மனிதப் பலவீனங்கள் இருக்கின்றன. சிலருக்கு உயர்வுச் சிக்கல்கள் அல்லது தாழ்வுச்சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றது. பனிப்போருக்கு நாம் பயந்தவர்கள் அல்லர். தலைமைத்துவ கதிரையை காலி செய்வது பெரிய விஷயமல்ல. தலைமைத்துவத்துக்குரிய தகுதியிருந்தால் அந்தக் கதிரையில் யாரும் அமரலாம். அத்துடன் அதற்கு மக்களது அங்கீகாரமும் வேண்டும்.

பனிப்போர் இன்று எங்கும் நடக்கிறது. ஐ.தே.க. பொ.ஐ முன்னணி ஆகியவற்றிலும் பனிப்போர் நடக்கின்றது. நாம் மட்டும் அதற்கு விதி விலக்கல்ல.

குறுகிய அரசியல் இலாபத்திற்காக அன்றி இதய சுத்தியோடு விஷயங்களை அணுகப் பழகிக் கொள்ள வேண்டும்.

கட்சியிலிருந்து விலகியவர்கள் இப்பொழுது உள்ளே வர எத்தனிக்கிறார்கள். நிபந்தனைகள் இன்றி வருவதற்கு கட்சியின் கதவுகள் திறந்தேயிருக்கின்றன.

முசுலிம்களின் பிரச்சினைகளை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் சரிவரத் தெரிய வைப்பதற்காக பல்கலைக்கழக முசுலிம் மாணவர் சமூகம் ஏற்பாடு செய்துள்ள மாபெரும் பிரார்த்தனை நிகழ்வை வெற்றிகரமாக நடத்துவதற்கு நாம் பூரண ஒத்துழைப்பு வழங்க இருக்கின்றோம் என்றார்.

## செய்திச்சரம்

**28-3-2002**

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண நேரடி பேச்சு வார்த்தையில் விரைவில் ஈடுபட இலங்கை அரசும் புலிகள்இயக்கமும் அரசும் ஒப்புக் கொண்டுள்ளன. மே மாதம் முதல் வாரத்தில் பேச்சு வார்த்தை துவங்கும் என்று இலங்கையின் அரசியல் சட்ட அமைச்சர் ஜி. எல். பெரிஸ் நேற்று கொழும்பில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

(தினமணி, தினகரன், தினமலர், தினத்தந்தி)

இலங்கை அரசுடன் புலிகள் வரும் மே வாக்கில் நேரடி பேச்சு நடத்த இருப்பதை தாம் வரவேற்பதாக இலங்கை அதிபர் சந்திரிகா கூறியுள்ளார்.

(தினகரன்)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பேச்சு தொடர்பாக போர் நிறுத்தத்தை முழுவதுமாக அமுல்படுத்த வேண்டும். புலிகள் மீது தடையை நீக்க வேண்டும். வடக்கு, கிழக்கு மாநிலத்தில் மாமுல்நிலைமை ஏற்பட வேண்டும் என்பது போன்ற மூன்று நிபந்தனைகளை அன்டன் பாலசிங்கம் விதித்துள்ளார்.

(தினகரன், தினமணி, தினமலர்)

**29-3-2002**

வடக்கு யாழ்ப்பாணத்தில் போர் பாதித்த பகுதிகளை 30 பேர் கொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் குழு நேற்று பார்வையிட்டது.

(தினமணி)

யாழ்ப்பாணம் வளைகுடாவில் காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய துறைமுகங்கள் சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டு உள்ளது என இலங்கை வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயகே கூறியுள்ளார்.

(தினகரன்)

**30-3-2002**

இனப் பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கை அரசும், புலிகளும் தாய்லாந்தில் பேச்சுவார்ந்தைநடத்தஒப்புக் கொண்டுள்ளதாக தாய்லாந்து வெளியுறவு அமைச்சர் சுரகியார்த் சத்திரதை, நார்வே துணை அமைச்சர் விதா ஷெல்ஜசன் ஆகியோர் கூட்டாக நேற்று அறிவித்தனர்.

(தினமணி, தினகரன், தினமலர், தினத்தந்தி, இந்து)

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் இந்தியாவில் தங்கி பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்று நேற்று சென்னையில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

(தினமணி, தினத்தந்தி)

# முஸ்லிம்களின் நேச சக்தி தமிழர்கள்; தென்னிலங்கை பேரினவாதிகள் அல்லர்

தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை சுயநிர்ணய உரிமையை மறுத்து நிற்கும் தென்னிலங்கை பேரினவாதச் சக்திகள் தற்போது முஸ்லிம் மக்களின் மீது அதிகளவிலான பாசமும், பரிவும் கொண்டுள்ளதாகக் காட்டிக்கொள்கின்றன.

அத்துடன் முஸ்லீம் மக்களது உரிமை, பாதுகாப்பு தொடர்பான அக்கறையும் ஏற்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதை மறுதலித்து வந்த எம்.ஈ.பி. பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தனா சிங்கள மக்கள் சிங்கள தாயகம் பற்றியும், தமிழ் மக்கள் தமிழ் தாயகம் பற்றியும் பேசுகின்றனர். இதனால்தான் முஸ்லிம்கள் கிழக்கில் முஸ்லிம் தாயகம் பற்றிப் பேசுகின்றனர். கிழக்கின் தாயகம் பற்றி பேசும் உரிமை தமிழர்களுக்கு இல்லை என்று பாராளுமன்றத்தில் பேசியுள்ளார்.

இந்தப் போக்கு தற்போது தென்னிலங்கை அரசியலில் தாராளமாகப் புழக்கத்தில் இருக்கும் சமாசாரமாக உள்ளது.

தென்னிலங்கை பேரினவாதச் சக்திகளுக்கு வடக்கு-கிழக்கு முஸ்லிம் மக்கள் மீது ஏனிந்த திடீர் அக்கறை? புரிந்துணர்வு உடன்படிக்கை தான் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன் உருவாகியுள்ள சமாதானச் சூழலை குழப்பி அதில் குளிர் காய முயலும் பேரினவாதச் சக்திகளின் கபட நாடகம் என்பதும் பரம ரகசியமல்ல; இது தமிழ் முஸ்லிம் மக்களும் அறியாத ஒன்றல்ல.

1985ம் ஆண்டு நடைபெற்ற திம்புப் பேச்சு வார்த்தையின் போது முஸ்லிம் மக்களின் நலன்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பது உண்மையே.

ஆனால் திம்பு பேச்சுவார்த்தைக்குப் பிறகு தமிழ்க் குழுக்களிடையே ஏற்பட்ட ஒற்றுமை இலங்கை அரசாங்கத்துக்கும் அதன் நேச சக்திகளுக்கும் சந்தோஷம் தரும் செய்திகளாக அமையவில்லை.

இதன் விளைவு இச்சக்திகள் ஒன்றுபட்டு முஸ்லிம் என்ற பிரச்சினையைக் கிளப்பின. இதனைத் தொடர்ந்து தமிழ் பேசும் மக்கள் என்ற நிலையிலிருந்து முஸ்லிம் மக்கள் வேறுபட்டு தாங்கள் தமிழ் என்ற அடையாளத்தை ஏற்காமல் தமிழ் பேசும் முஸ்லிம்கள் என்ற அடையாளத்திற்குள் பிரவேசித்தனர்.

1985ம் ஆண்டுக்கு முன் இத்தகைய போக்கு இருக்கவில்லை.

'இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ் எங்கள் மொழி' என கலாநிதி உவைஸ் கூறியவை இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

1985ம் ஆண்டுகளில் அப்போதைய தேசியப் பாதுகாப்பமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி இஸ்ரேல் மொஸாட் என்பன இணைந்து தமிழ்-முஸ்லிம்உறவுகளை சீரழிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அதிரடிப்படை, எல்லை ஊர்க் காவல் படை, உளவுப் படையென உருவாக்கம் பெற்று விடுதலைப் புலிகளுடன் ராணுவ ரீதியிலான மோதலாக வெடித்தது. இந்த மோதல்கள் இனரீதியிலான மோதலாகச் சித்தரிக்கப்பட்டன.

காத்தான்குடி, ஏறாவூர் சம்பவங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை என்பன நியாயப்படுத்த முடியாதது என்பது உண்மையே.

அதேபோல வந்தாறு மூலை, பாண்டிருப்பு என தொடராக தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட சம்பவங்களும் நியாயப்படுத்த முடியாதவைகளாகும்.

இவை அனைத்தும் தமிழ்-முஸ்லிம் மக்கள் முகம் கொடுத்த கசப்பான ஜீரணிக்க முடியாத விடயங்களாகும்.

மேற்கூறிய கடந்த கால நிகழ்வுகளை முன்னிறுத்தி தமிழ்-முஸ்லிம் மக்களை தற்போதைய சமாதானச் சூழலிலும் பிரித்து வைக்க முயல்வதை அனுமதிக்க வேண்டுமா என்பதுதான் இன்றைய கேள்வியாகும். முஸ்லிம் மக்கள் தொடர்பாக பிழைகளை விட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் ஒத்துக் கொண்டுள்ளனர்.

கடந்த காலங்களில் நாம் சில தவறுகளை செய்திருக்கலாம். முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டதையிட்டு யாரும் கவலைப்படாமல் இருக்க முடியாது.

முஸ்லீம்களுக்கென தனியான கலாசாரம் ஒன்று உண்டு, ஆனால் மொழியால் நாங்கள் ஒன்றுபட்டவர்கள் என விடுதலைப் புலிகளின் அரசில் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வன்னியில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தாம் பிழை செய்ததை பகிரங்கமாக ஒத்துக் கொண்டுள்ளனர். இதே நிலைக்கு முஸ்லிம் தரப்பும் வர வேண்டும்.

அத்துடன் வடக்கு-கிழக்கு முஸ்லிம்கள் தங்களது நலன்கள் யாருடன் பின்னிப் பிணைந்துள்ளன என்பதை நடுநிலையுடன் நின்று ஆராய வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில்கிழக்கில் முஸ்லிம்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான முரண்பாடுகள் முதன்மைப்படுத்தப்படுகின்றன.

ஆனால் கிழக்கில் பேரினவாதிகளுடனான முரண்பாடுகள் பற்றி பெரிதாக முதன்மைப்படுத்தப்படுவதில்லை.

**விடுதலைப் புலிகள் கடந்த காலப் பிழைகளை ஒத்துக் கொண்டுள்ளனர் முஸ்லிம் சக்திகளும் தாம் விட்ட தவறுகளை ஒத்துக் கொள்ள வேண்டும்**

தீகவாபி, பொன்னன் வெளி, பொத்துவில், அல்லை போன்ற பகுதிகளில் சிங்களப் பேரினவாதம் எவ்வாறு நடந்து கொள்கின்றது என்பது கிழக்கு முஸ்லிம் மக்கள் அறியாத ஒரு விடயமோ அல்லது அனுபவ ரீதியாக காணாத ஒரு விடயமாகவோ இருக்காது.

1984ம் ஆண்டு இஸ்ரேல் காரியாலயத்தை இலங்கையில் திறந்தபோது கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். அவ்வேளையில் இதுபற்றி குறிப்பிட்ட ஜே ஆர். ஜயவர்தனா 1983ல் தமிழர்களுக்கு நடந்தது உங்களுக்கும் நடக்கும் என பகிரங்கமாகவே கூறினார்.

1994ம் ஆண்டிலிருந்து 2001ம் ஆண்டு வரை முஸ்லிம் கட்சிகள் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்திருந்தன. இறுதியில் மாவனல்ல அனர்த்தமே பரிசாகக் கிடைத்தது. இது மலையகத் தமிழர்களுக்கும் பொருந்தும் இவர்களுக்கு இரத்தினபுரி வேவல்வத்தை பரிசாகக் கிடைத்தது.

மொத்தத்தில் கூறுவதானால் முஸ்லிம்களின் நலன்கள் உரிமைகள் என்பன பேரினவாத மற்றும் ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களுடன் தொடர்புபடுத்தப்படக் கூடியதல்ல.

அத்துடன் கடந்த கால நிகழ்வுகளை சாட்டாக வைத்துக் கொண்டு தமிழ்-முஸ்லிம் உறவில் விரிசலைஏற்படுத்தி குளிர்காய முற்படும் சக்திகளுக்குத் துணை போவதை அனுமதிக்கக் கூடியதுமல்ல. அத்தகைய செயற்பாடுகளுக்கு இடமளிக்கவும் கூடாது.

எனவே முஸ்லிம் மக்கள் விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசி தீர்வு காண வேண்டிய நிலையிலேயே உள்ளனர். இருபகுதியினரும் ஒருவரை ஒருவர் அணைத்துப் போக வேண்டிய நிலையிலும் உள்ளனர்.

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் போது முஸ்லிம் மக்களின் தனித்துவம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. அப்பகுதியில் நாங்கள் சிறுபான்மையினர் என்ற உணர்வு இருக்காத வகையில் அவர்களுக்கு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்.

அந்த வகையில் வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் நலன்கள், உரிமைகள் என்பன தமிழ் மக்களுடனான நலன்கள் உரிமைகள், பாதுகாப்பு என்பவற்றுடன் பின்னிப் பிணைந்துள்ளது என்ற யதார்த்தம் உணரப்பட வேண்டும். அதற்கு மாறாக பேரினவாத சக்திகளுடன் அல்ல என்ற உண்மையையும் முஸ்லிம் மக்கள் உணர வேண்டும்.

-வி. தேவராஜ்

# ஈழத்துக் காந்தியின் நினைவே இந்தியாவையும் இலங்கையையும் காக்கும்

தந்தை செல்வா பிறந்த நாள் விழாவில் முனைவர் ஔவை நடராசன்

ஈழத் தந்தை செல்வநாயகம் அவர்களின் பிறந்த நாளை ஒட்டி நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நாம் எல்லாம் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றோம். இந்த விழாவில் பங்கு பெறுவதற்காக உடன் வந்திருக்கும் துணைவேந்தர் முத்துக்குமரன் அவர்களே! உலகத் தமிழர் பேரவையின் தலைவராக இருக்கின்ற டாக்டர் ஜனார்த்தனம் அவர்களே! திருமதி மணிமேகலை கண்ணன் அவர்களே! ஓர் அழகிய நூலை ஆராய்ந்து எழுதிய பேராசிரியர் சிற்றம்பலத்தின் நூலை வெளியிடுகின்ற வாய்ப்பு இந்த விழாவிற்கு பொலிவூட்டியதாக இருக்கின்றது. அருமைத் தலைவர் சந்திரகாசன் அவர்கள் நான் பல்லாண்டுகளாக அறிந்த பண்பாளர். தன்னுடைய வாழ்வெல்லாம் நட்புக்கும் நல்லுறவுக்கும் ஒருங்கிணைத்துக் காட்டுகின்ற உண்மை உறவுக்குமாகச் செலவு செய்வது மட்டுமல்லாமல், ஈழத் தமிழர் பாதுகாப்புக்கழகத்தின் தலைவராக இருந்து எந்த அரசோடும் உரசல் இல்லாமல் அன்பால், ஆதரவால், பண்பால் பரிவால் நல்வாழ்வை எய்த முடியும் என்னும் நயத்தக்க நாகரிகக்கோட்பாட்டை வாழ்ந்து காட்டுகின்றவர்தான் பெருந்தகை சந்திரகாசன் அவர்கள்.

பெருமக்களே! ஈழத் தந்தை செல்வா அவர்களை நான் பார்த்து இருக்கின்றேன். அவர்கள் அன்று தன்னுடைய பயணத்தை புதுடில்லிக்கு மேற்கொண்டு, இந்திராகாந்தி அம்மையாரோடு பேச வேண்டும் என்று கருதி இருந்தார்கள். தனது சூழல் மாற்றத்தால் அது நிகழாமல் அவர்கள் திரும்ப நேரிட்டது.

உலகம் முழுவதிலும், ஏன் உலகம் முழுவதிலும் என்று சொல்கின்றேன் என்றால், இன்று எல்லா நாடுகளிலும் ஒரு மாபெரும் சிக்கலாகத் திகழ்வது இனத்தினால், மொழியின்பால் காட்டுகின்ற உணர்வினால் பல்வேறு வகைகளில் பிரிந்து மக்கள் இருக்கின்றார்கள். இனத்தால் பிரிவது போலவே மதத்தால் பிரிந்து வாழ்கின்றார்கள், மொழியால் பிரிந்து வாழ்கிறார்கள் இந்த வாழ்க்கையை பிரிப்பதற்காகத்தான் இனம், மதம், மொழி இவைகள் எல்லாம் தோன்றி விட்டனவோ என்று உலக அறிஞர்கள் இப்போது வருந்துகின்ற அளவுக்கு இந்தப் பிரிவினைகளுடைய கொடுமைகள் வளர்ந்து இருக்கின்றன மிக அருமையாக நம் நெஞ்சினிக்கப்பாடியவர்கள் பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் கொல் குறும்பும் சேர்ந்து உலக நாட்டு மக்களில் எத்தகைய கலக உணர்வுகளை வளர்த்து வருகின்றது என்பதை மிக நுணுக்கமாக எடுத்துச்சொன்னார்கள். இந்த நிலைமை உலகத்தில் ஏன் வளர்ந்தது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். விவிலியத்தில்கூட ஒரு மொழி பேசியவர்கள் கட்டிய கோபுரத்தை அவர்கள் முழுவதுமாகக் கட்டி முடித்தால் அவர்கள் வானத்தை எட்டி, பிறகு வானத்தையும் துளைத்துவிடுவார்கள் என்பதனால் பல மொழிகள் பேசியதனால், அவர்கள் பிரிந்தார்கள் என்பது போன்ற குறிப்பு இருப்பதாக நான் நினைக்கின்றேன் ஆனால் இந்த மொழி உணர்வும், இனம் என்ற காப்பும் மக்களிடத்தில் இன்று நேற்று தோன்றியது இல்லை.

''பிறந்தநாள் முதற் கொண்டு பிறந்து மொழி பயின்று காதல் சிறந்துநின்று சேவடியே சேரப்பெற்றேன்'' என்பது காரைக்கால் அம்மையாருடைய பாடல். எனவே பிறந்நாள் முதற் கொண்டு உணர்விலும், உயிரிலும் உறைந்து கிடக்கின்ற இன உணர்வும், மொழி உணர்வும் மக்கள் உல. த்திற்கு இவர்கள் யார் என்றுகாட்டுகின்றன.

இந்தச் சூழ்நிலைவாய்ப்பினாலோ ஆட்சியாலோ அல்லது அமைப்பினாலோ மக்களுக்குள்ளே ஏற்பட்டதுதான் பெரும்பான்மை, சிறுபான்மை என்பதாகும். பெரும்பான்மை சிறுபான்மை என்பதெல்லாம் மனப்பான்மையில் வந்தகோட்டினால் வந்த விளைவு. காரணம்பொருந்துவதாக இருக்குமானால் இதில் பெரும்பான்மை, சிறுபான்மை என்றெல்லாம் வேறுபடுத்தி காண்பதற்கு வாய்ப்பே இல்லை. ஆனால் பிரித்துக்காட்டுகின்ற சுவடுகளாகிய மொழியும் இனமும் வாழ்க்கை அமைப்பும் மக்களை இப்படி எல்லாம் ஆக்கிவிடுகின்றன. இந்தச்சூழ்நிலையில்தான் நெடுங்காலமாக பல இனத்தைச் சார்ந்தவர்கள் பல் மொழி பேசுகின்றவர்கள் பல்வேறு குழுவைச் சார்ந்தவர்கள் ஒன்றுபட்டு வாழ முடியும் என்று நினைத்து உலகத்தில் மக்கள் வாழ்ந்தார்கள். எல்லோரும் இணைந்து வாழ்கின்றபோது வெள்ளை நிறத்தில் ஒருபூனை சாம்பல் நிறத்தில் ஒரு பூனை இந்தப் பூனைகள் எப்படி இருந்தாலும் எல்லாம் ஒன்று எனக் கண்டேன் என்றுகூடப் பாரதியார் பாடி இருக்கின்றார்.

ஆனால் இத்தகைய பிரிவுகளுக்கு நடுவில் ஏற்படுகின்ற உணர்வை நாம் எந்த வகையிலும் மாறுபாடு இல்லாமல் வேறுபாடு இல்லாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றுதான் உலகத்தில் கிட்டத்தட்ட நான்கு நூற்றாண்டுகள் வரை இந்தச் சிந்தனை இல்லாமல் அனைவரும் வாழ்ந்து இருக்கிறார்கள். அந்த நிலையில் தான் இலங்கை நாட்டில் ஏற்பட்ட ஆங்கிலேயர் ஆட்சியில் அகப்பட்டு இருந்தபோது கூட் இலங்கை நாட்டில் மிகப் பெரிய பிரிவாக சிங்கள மரபும் சிங்கள இனமும் சிங்கள வழிமுறைகளும், சிங்கள வாழ்வு முறையும் தமிழ் மரபும், தமிழ் இனமும், தமிழ்க் கோட்பாடுகளும் இருவேறு நிலையில் கலந்து இருக்கின்றனஎன்பதைப்பற்றித் தெரிந்திருந்தும்கூட ஆங்கிலேயர் அதைப்பற்றி மிகக் கவலை செலுத்தாமல் போய்விட்டார்கள். இது நமக்கு வருந்தத்தக்க நிகழ்ச்சியாகும்.

இந்திய நாட்டை காண்கின்ற பொழுது மதத்தினால் தாங்கள் ஒன்றுபட்டு நிற்கின்றோம் என்று ஒரு கருத்தை சொன்னபோது மத வழியாக ஒரு நாட்டில் பிரிவு காணலாமா? என்று மக்கள் பேசிக் கொண்டு இருந்த நேரத்திலே ஆங்கிலேய அரசு அவர்கள் கேட்டதிலும் பொருள் உண்டு என்ற ஒரு ஆர்வத்தைக் காட்டியதால் தான் பாக்கிஸ்தானம் பிரிந்தது என்பது தெரியும். ஆனால் இந்த உணர்வை ஏன் இலங்கைநாட்டில் அவர்கள் காட்டவில்லை என்பதற்குக் காரணம் இலங்கை மக்கள் தக்கவர்களாகவும், எந்த நிலைமையும் தாங்கிக் கொள்கின்றவர்களாகவும், இளகிய மனமுடையவர்களாகவும் வேறுபாடுகளுக்கு இடையில் மகிழ்ந்து வாழலாம்என்கின்ற மனப்போக்கு உடையவாகளாகத்தான் வாழ்ந்தார்கள். ஆனால் அந்த நிலையைக் கெடுப்பதும், அந்த நிலைமையைக் கொடுமைப்படுத்துவது என்பதும் அந்த நிலையில் சிலரை அடிமையாக்குவது என்கின்ற ஒரு வஞ்சகநிலை தலைப்பட்ட நேரத்தில்தான் ஒரு புதிய உணர்வை-தமிழ் இனமாட்சியை-தமிழ் மரபினுடைய காட்சியை-தமிழன் தோற்றத்தை- தமிழனின் வாழ்க்கைப் பெருமிதத்தை முதன் முதலாக எடுத்துக் காட்டியவர் - ஈழத்தந்தை செல்வா அவர்களாவார்.

அதற்குமுன்னால் அந்தக் கருத்து எவருக்கும் இல்லை. வேண்டுமென்றால் பாராளுமன்றத்தில் நான்கு இடம் பெற்றால் போதும் என்ற கட்சிகள் இருந்தன. பொறுத்துப்பொறுத்து பார்த்து தாங்க முடியாத பாரத்தை ஏற்று தழும்புகளையும், சுவடுகளையும் ஏற்றதுடன் அதன்விளைவாகத்தான் ஈழத்தந்தை அவர்கள் தனியாகப் பிரிந்து வாழும் கருத்துக்களைசொன்னார்கள்.

பெரும்பான்மை, சிறுபான்மை என்பது இல்லை. இனத்தினால், உணர்வினால் மாறுபட்டவர்கள் என்றிருக்கின்றபோது நாம் எத்தகைய வகையிலோ ஒன்றாகக்கூடி நன்றாகப்பேசி, மக்களுடைய மனங்களுக்கு ஏற்றமுறையில் ஏன் ஒரு கூட்டு அமைப்பை உருவாக்கக் கூடாது என்ற கருத்தையும் சொன்னார். தந்தை செல்வாவை இன்று நினைப்பது நமக்கு நல் உணர்ச்சியும் ஊக்கமும் தரும் என்று நான் நம்புகிறேன். தமிழ் மக்களுடைய தொன்மையைப்பற்றி இன்று வெளியிடப்படுகின்ற நூல் ஒரு வரலாற்று நுணுக்கம் வாய்ந்ததாகும்.

யார் தமிழர்களைப் பிரித்தார்கள் என்றுபார்த்தால் மக்கள் பிரிப்பதைக் காட்டிலும் கடலே பிரித்துஇருக்கின்றது. இந்தக் கடல் பிரிப்பதற்கு முன்னால் அந்த மண்ணும், இந்த மண்ணும், அந்த மக்களும் இந்த மக்களும் எந்த வகையில் ஒருங்கிணைந்தார்கள் என்பதை நாம் காணத் தொடங்கு விட்டால் தொன்மை என்பது தானாக அமைந்துவிடும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியத்தின் ஏடுகளைப் புரட்டினால் ஈழத்துப் பூதன் தேவனார் என்பவர் எழுதிய பாடல் கிடைக்கின்றது.

ஈழத்திலிருந்து வந்த உணவைத்தான் இங்குள்ளவர்கள் பெற்றார்கள் என்

(6-ம் பக்கம் பார்க்க)

# வாசகர் நெஞ்சம்

அன்புள்ள ஆசிரியரே,

''அன்று சந்திரிகா ஏமாற்றினார்! இன்று ரணிலும் ஏமாற்றி விடுவாரா? ஏகப் பிரதிநிதி' யார் என்பதல்ல; ஈழத் தமிழர்களின் எதிர்காலம் என்ன?', என்ற தலைப்பில் முதல் பக்கத்தில் இடம் பெற்றிருந்த கட்டுரை உண்மை நிலையைத்தான் பிரதிபலித்தது என்றாலும், இன்று உலகமே ஒரு திசையில் செல்ல, மறு திசையில் செல்வதாகவே இருந்தது,

'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்ற திருக்குறளை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

இராம.பாண்டுரங்கன், ஆரணி.

உண்மையை உடைத்துச் சொன்ன ஈழ சுதந்திரன் முதல்பக்கக் கட்டுரையைப் பாராட்டுகிறேன்.

ஆர். ஆர். ஸ்ரீஸ்கந்தராசா, சென்னை-78.

''ஒன்றுபட்டு வென்று காட்ட செல்வாவை நினைப்போம்'' முதல் பக்கக் கவிதை முத்தான கவிதை.

இரா. கோணேஸ்வரன், திருச்சி-1.

''தமிழகத் தாய்க்குரல் இலங்கைக்குக் கேட்கட்டும்'' ஆசிரியவுரை அருமை. தமிழக அரசும், அரசியல் கட்சிகளும் எண்ணிப் பார்க்குமாக.

கே. மரியதாஸ், சென்னை-4.

'கவிதைச் சரத்தில்' 'எமக்குப் புரியலே!' 'தமிழ்மதாசனின் கவிதையும், 'விதியா, சதியா?' சின்னப்பள்ளிக் குப்பம் யோகேஸ்வரன் கவிதையும் நெஞ்சைத் தொட்டன. 'சுதந்திரம் என்பது பிச்சையல்ல' சிவானந்தன் கவிதை சிந்தனையைத் தூண்டியது.

எஸ்.பி. சுபத்திரா, கோவை-3.

'வழங்குவதால் வருவதா வறுமை?' என்ற 'அருகோ'வின் ஒரு குறள் உரை புதுமையும் புரட்சியும் கொண்டு திகழ்ந்தது. கதிரைமலை பற்றி யாழ்ப்பாண வைபவ மாலையில் வருவதை கலாநிதி சிற்றம்பலத்தார் தான் எழுதி வரும் ஈழ வரலாற்றில் தகுந்தபடி கையாண்டிருந்தது போற்றுதலுக்குரியது.

வி.எஸ். நவமணிடேவிட், திருப்பூர்.

'தந்தை செல்வா' வரலாற்றுத் தொடரில் சிறிமா அரசு கவிழ்ந்த காலகட்டத்தைத் தனக்கே உரிய வரலாற்றுணர்வோடு விவரித்திருந்தார் த. சபாரத்தினம் சென்ற இதழில் செய்திகள் அதிகமிருந்தன. தாயகம் செய்திகளைப் பற்றி அறிந்து கொள்கின்ற வாய்ப்புக் குறைந்த அகதி மக்களுக்கு வரப்பிரசாதமாக விளங்குவது ஈழசுதந்திரன் ஒன்றே.

என். கதிர்காமத்தம்பி, மதுரை-9.

# ஈழத்துக் காந்தியும் முத்தமிழ்க் காவலரும்

திருமதி கி. ஆ.பெ. வி. மணிமேகலைக்கண்ணன்

இன்றைய தினம் வாழ்த்துரை வழங்க வாய்ப்பளிக்கப்பட்ட எனக்கு எதிர்பாராத மகிழ்ச்சியாக, தந்தைசெல்வா அவர்களின் திருஉருவச் சிலையை திறந்து வைக்கும் பேறு கிடைத்திருப்பது என்னுடைய வாழ்க்கையில் கிடைத்த பெரும் பேறாக நான் கருதுகின்றேன். ஏன் என்று சொன்னால் என் தந்தை முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. அவர்களும், நம் ஈழத் தந்தை செல்வா அவர்களும் வேறுவேறு அல்ல. இருவருமே தோற்றத்தில் ஒருவர் வயதில் ஒருவர். கொள்கையில் ஒருவர்; செயலில்ஒருவர் எல்லாவற்றிலுமே அவர்கள் இருவரும் ஒருவராகவே வாழ்ந்தவர்கள் என்பதைநான் நன்கு அறிவேன். அவரைப் பற்றித் தெரிந்திருந்தவர்கள் நன்கு அறிவர்.

இந்தச்சிலையைப் பாருங்கள் சரியாக கி.ஆ.பெ.போல் இருக்கின்றார். கோட்டும் சூட்டும் இல்லை என்றால், வேட்டி சட்டை போட்டால் சரியாக கி.ஆ.பெ. மாதிரி இருக்கும். அந்த நீள முகம் அந்த மூக்கு எல்லாமே அதே போல அவர்களுடைய மகன் பெருமதிப்புக்குரிய சகோதரர் சந்திரகாசன் அவர்கள் என்னுடைய அண்ணனைப்போல் இருக்கிறார்.

உண்மையிலே இந்த விழாவில் இன்றைக்கு நான் ஏன் மகிழ்ச்சி அடைகிறேன் என்றால் இது எங்கள் குடும்ப விழா. என்னுடைய தந்தையின் வயதும் இவர்களுடைய வயதும் சற்றேறக்குறைய ஒன்றே. இதே 104வது பிறந்த நாள் விழாவை, அண்ணன்கூட வந்திருந்தார்கள், கற்பகம் ஓட்டலில் வைத்து நடைபெற்றது. அது மட்டுமல்ல; தந்தை செல்வநாயகம் அய்யா அவர்கள் எங்கள் இல்லத்துக்கு வந்து எனது கையால் உணவு பரிமாறிய பெரும்பேறு எனக்கு கிட்டி இருக்கின்றது. நான் அவர்களுடன் இருந்து அளவளாவி மகிழ்ந்திருக்கின்றேன் என்று எண்ணும்போது எத்தனை பேருக்கு இந்த வாய்ப்புக் கிடைத்திருக்கும்? எனது தந்தை முத்தமிழ்க் காவலருக்கு அல்லவா அந்த நன்றி போய்ச்சேர வேண்டும் என்று நான் எண்ணிப் பார்க்கின்றேன்.

அதுபோல இன்றைக்கு இந்த அய்யாவின் சிலை திறப்பு விழா- பிறந்த நாள் விழா-ஈழத் தமிழரின் தொன்மையை பற்றிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் சிற்றம்பலனார் எழுதிய நூல் வெளியீட்டு விழா ஆகிய முப்பெரும் விழா வெகுசிறப்பாக நடத்தி இருப்பதுகண்டுநான் மகிழ்ச்சி அடைகிறேன்; வரவேற்கின்றேன்.

ஒன்று மட்டும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். தலைவர் அவர்கள் பேசும் பொழுது சொன்னார்கள் பெரும்பான்மை, சிறுபான்மை எல்லாம் மனப்பான்மையைப் பொறுத்தே அமைகிறது என்று தந்தை செல்வா அவர்களின் வாழ்க்கையை எடுத்துப் பார்க்கும்போது என்றைக்கும் சிறுபான்மையினர் தேவைகளை பெரும்பான்மையினர் அறிய மறுத்தார்களோ, பெரும்பான்மையினருடைய கொடுமை அதிகமாக இருந்ததோ, அன்றைக்குத்தான் அவருடைய அரசியல் பிரவேசமே நிகழ்ந்திருக்கின்றது இப்படி நிகழும்போது அவர்கள் ஒரு கிறிஸ்தவராக விளங்கி இருக்கின்றார். நம்முடைய தமிழ் மக்கள் ஒரு கிறிஸ்தவரைத் தலைவராக ஏற்று தமிழர்கள் அனைவரும் ஒரு குடையின் கீழ் ஒன்றாக ஈழத்தமிழர்களின் விடுதலைக் கூப்பாடுபட்டு நின்றார்கள் என்று சொன்னால் இது எவ்வளவு பெரிய சிறப்பு என்று நாம் நினைத்துப் பார்க்க வேண்டாமா?

அங்கே இருக்கின்றது பெரும்பான்மை, சிறுபான்மை ஜாதி, மத, பேதம் அத்தனையும்மொழியால்இங்கு அழிந்து ஒன்றுபட்டு விட்டதே! மொழி என்றுவரும்போது அண்ணன் சொன்னார்கள் கடல் நம்மை பிரித்து விட்டது, ஆனால் மொழி நம்மை ஒன்றுபடுத்தி இருக்கின்றது என்று எங்கே இருந்தாலும் தமிழர்கள் தமிழர்கள்தான். உலகெங்கிலும் உள்ள அத்தனை தமிழர்களுமே நம்முடையசகோதரர்கள்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

உயிரை பெரிதாக நினைக்கவில்லை, எப்போது இந்தத் தமிழர்கள் ஒன்றுபடப் போகிறோம் என்று தந்தை செல்வா ஏங்கினார்கள் அந்த அளவிற்கு தமிழரின் ஒற்றுமையிலே, தமிழரின் நலனிலே அக்கறை கொண்டார்கள். அன்றைக்கு அவர்கள் ஒரு வித்திட்டார்கள். ஒரு விதை இட்டார்கள். அந்தப் பலனை அவர்கள் உடன் எதிர்பார்க்கவில்லை. அன்றைக்கே சொன்னார்கள் இன்றைக்கு நாம் விதைக்கின்ற விதை பின்னால் எமது சந்ததிகளுக்காவது பயன்படும் என்று சொன்னார்கள். அதனுடைய பலன்தான் அவர்களுடைய உழைப்புத்தான் இன்றைக்கு இவ்வளவு போராட்டத்துக்குபிறகு இன்றைக்கு நோர்வே குழு புறப்பட்டு சமாதானத்தை நிலைநிறுத்தி இன்றைக்கும் நமக்கு உரிமையைப் பெற்றுத்தரப் போராடிக் கொண்டு இருக்கின்றது.

அண்ணன் அருகோ அவர்கள் வரவேற்புரையில் கூறும் போது இந்த ஏதிலியர்கள் எல்லாம் அமைதி திரும்புமா? தாயகம்திரும்புவோமா? என்று நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்றார்.

இன்றைக்கு இந்த நல்ல நாளில் தந்தை செல்வாவின் ஆன்மா நிச்சயம் இதில் நல்ல திருப்பத்தை கொண்டு வந்து அவர்கள் ஆன்மாவே சாட்சி கூறும் அளவுக்கு இதில்நல்ல திருப்பம் ஏற்பட்டு வருகிறது. இன்றைக்குத் திரும்பி இருக்கின்ற அமைதி, நிரந்தரமான அமைதியாக அமைந்து ஈழத் தமிழர்கள் அனைவரும் உரிமையோடு தாயகம் திரும்புவார்கள், திரும்ப வேண்டும் என்று இறைவனை வேண்டிக்கொண்டு அனைவருக்கும் நன்றி கூறி அமைகின்றேன்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பதை ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும் என்றெல்லாம் பத்துப் பாட்டு வரிகள் காட்டுகின்றன.

அது மட்டுமல்லாமல் கல்வெட்டுக்களால் இன்னும் பல சான்றுகளால் மாந்தவியல் நுட்பத்தால் இந்த மரபு எவ்வளவு தொன்மையானது என்பதை எல்லாம் விளக்குகின்ற ஒரு சிறிய ஏடு என்பதால் பெரிய கருத்துக்கள் விளக்குகின்ற இந்த நூலை வெளியிடுவது போற்றத்தகுந்த முயற்சியாகும்.

நண்பர் சந்திரகாசன் அவர்கள் விடாப்பிடியோடு கண்ணீரைத் துடைக்கவேண்டும் என்ற ஆர்வத்தோடு இந்தக் காப்புக் கழகத்தை நடத்தி வருவதை நான் மகிழ்ந்து பாராட்டுகிறேன். நல்வாழ்வு அமைய வேண்டும் நாட்டு மக்களுக்கு எந்நாளும் மகிழ்ச்சி பெருக வண்டும். தமிழ் என்றாலே, இனிமை என்றுதான் பொருள். தமிழ் என்றால் ஒருமை என்றுதான் பொருள். எனவே அத்தகைய ஈழத்தமிழகத்தின் தந்தையை நினைத்து, நம்முடைய சிந்தை எல்லாம் இப்போது குளிர்கின்றது. அவருடைய கனவும் அவருடைய எண்ணமும் ஈழத்தையும் இந்தியத் தாயகத்தையும்காத்து வளர்க்கும் என்று நான் நம்புகின்றேன்.

(சென்னையில் நடந்த தந்தை செல்வா பிறந்தநாள் விழாவில் தஞ்சைத் 'தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ஒளவை நடராசன் ஆற்றிய உரை.)

# இந்திய-இலங்கை உடன்பாடே இனப்பிரச்சினைத் தீர்வுக்கு என்றும் அடிப்படை

'வீரகேசரி' நடுநிலை நாளேடு தலையங்கம்

('வரலாற்றில் ஒரு திருப்பம்' என்ற தலைப்பில் 'வீரகேசரி' இதுபற்றி வரைந்துள்ள தலையங்கம்)

இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டம் காலத்துக்கு காலம் பல திருப்புமுனைகளை சந்தித்து வருகிறது. அவை ஒவ்வொன்றும் தமிழினம் எண்ணிப் பெருமைபடக் கூடிய சில வரலாற்றுப் பதிவுகளை தந்து விட்டுச் சென்றுள்ளது.

இந்த வரிசையில் முதலிடம் வகிப்பது திம்புப் பேச்சு வார்த்தையும் அதனையடுத்து இந்தியாவின் தலையீட்டோடு செய்து கொள்ளப்பட்ட இலங்கை-இந்திய உடன்படிக்கையுமாகும். இந்த உடன்படிக்கையே அதிகாரப் பகிர்வுக்கு கால் கோளாக அமைந்தது. மாகாண ஆட்சி சபை முறைக்கும் வித்திட்டது. வடகிழக்கு பகுதிகள் இரண்டும் இணைந்த ஒரு மொழி வாரி மாநிலமாக கணக்கில் எடுக்கக்கூடிய சாத்தியத்தையும் உருவாக்கியது.

அடுத்துக் குறிப்பிடக்கூடிய இரண்டாவது வரலாற்றுப் பதிவு, நோர்வேயின் அனுசரணையுடன் அரசும் விடுதலைப் புலிகளும் இப்பொழுது செய்திருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையை குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானது.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை காரணமாக யுத்தம் ஓய்ந்து விட்டது. மரண அவலங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு விட்டது. நாடும் மக்களும் சமாதானக் காற்றை சுவாசித்து வருகின்றனர். நாட்டின் எதிர்காலத்திலும் தமது சுபிட்சமான, நிம்மதியான வாழ்விலும் என்றுமில்லாத நம்பிக்கையை தோற்றுவித்துள்ளது. இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து இன்னமும் இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை.

ஆனாலும் வடகிழக்கில் மட்டுமல்ல நாடெங்கும் அமைதி நிலவுகிறது. நாட்டு மக்கள் அனைவரும் பயபீதி இன்றி நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று தமது ஜோலிகளை கவனித்து வருகிறார்கள். சுதந்திரமாக நடமாடுகிறார்கள். வாகனங்களில் போய்வருகிறார்கள்.

இதே வேளை நலிந்து போயிருக்கும் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கு வேண்டிய திட்டங்களை மிக நம்பிக்கையோடு முதலீட்டாளர்கள் தொழில்திபர்கள் தயாரித்துச் செயல்படுத்துவதற்கு வேண்டிய அத்தனை பிரயத்தனங்களையும் செய்து வருகிறார்கள். வெளிநாட்டு முதலீட்டாளர்களும் தயக்கமின்றிப் புதிய புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு முன் வந்து அதற்கான விசாரணைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள்.

இத்தகையதொரு நல்ல ஆரோக்கியமான சூழலைத் தந்துள்ள இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை, போராட்ட வரலாற்றில் மற்றுமொரு அத்தியாயத்தையும் ஆரம்பித்து வைக்கிறது.

யாழ்ப்பாண மக்களையும், தென் இலங்கை மக்களையும் இணைக்கும் பாலமாக ஆண்டாண்டு காலமாக இருந்து வரும் கண்டி-யாழ்ப்பாணம் நெடுஞ்சாலையான ஏ 9 பாதையை போக்குவரத்துக்கு இன்று மீண்டும் திறந்து விடுவதன் மூலம் இந்த புதிய அத்தியாயம் ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

ஆயுதப் போராட்டம் உச்சக்கட்டமாக பரிணமித்த பொழுது வன்னி மாவட்டம் விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் வடக்கையும் தெற்கையும் இணைக்கும் ஓரே ஒரு தரை வழிப் பாதையாக இருந்து வந்த இந்த நெடுஞ்சாலை மக்களின் போக்குவரத்துக்கு மூடப்பட்டது. அன்று முதல் இந்த நெடுஞ்சாலையைத் திறப்பதற்கு பாதுகாப்பு படையினர் பல்வேறு தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டே வந்தனர். கடந்த பதினொரு வருடங்களாக படையினரால் எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியிலேயே முடிவடைந்தது.

இதனால் யாழ். மக்களுடனான தொடர்பு கடல் மார்க்கமாகவும் ஆகாய மார்க்கமாகவும் இடம் பெற்று வந்தது. இப்பொழுது புரிந்துணர்வு உடன்படிக்கை சமாதான வழியில் இந்த பாதை திறப்பை சாத்தியமாக்கியிருக்கிறது.

PUBLIC LIBRARY JAFFNA

## அறிவியல் பகுதி

# உலகில் போர் ஓய்ந்தால்தான் மலைகளைக் காப்பாற்ற முடியும்!

மலைகள் பூவுலகில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. நீர், விறகு போன்றவற்றுடன் உயிரியல் பன்மயங்களையும் அதிகம் கொண்டவை. முக்கிய வளங்களான தாதுக்கள், கானக விளை பொருட்கள், வேளாண் விளை பொருட்கள் போன்றவற்றின் ஆதாரமாகவும் உள்ளன. பல்வேறுபட்ட சிக்கலான, ஒன்றுக்கொன்று தொடர்புடைய சூழலைக் கொண்டதாக பூமியின்பெரிய சூழல் அமைவாக மலைகள் உள்ளன. இவை உலகச்சூழல் அமைவின் வாழ்விற்கு இன்றியமையாதவையாகும்- என்று 'நிலைத்த மலை மேம்பாடு' பற்றி குறிப்பிடுகிறது பிரேசிலின் ரியோ-டி-ஜெனிரோவில் 1992ல் நடைபெற்ற புவி உச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட அஜென்டா-21 என்ற செயல்பாட்டு அறிக்கை.

சமவெளிப் பகுதிகளில் தற்போது அழிக்கப்பட்டு விட்ட பல தாவர வகைகள், விலங்குகளின் சாப்பிடமாக மலைகள் உள்ளன. எடுத்துக்காட்டாக ருவாண்டா, உகாண்டா மலைப்பகுதிகளில் மட்டுமே உலகின் கடைசி 300 மலைக் கொரில்லாக்கள் உள்ளன.

மலைப்பகுதிகளில் தனித்துவமான பண்பாட்டுக் கூறுகளை உடையவை. மக்களுக்கும் இயற்கைக்குமிடையேயான ஆழமான பிணைப்பை இவை வெளிப்படுத்துகின்றன. வெளிப்புறமிருந்து வருவோராலும். நவீனமயமாக்கத்தாலும், சண்டைகளாலும் இப்பண்பாடுகளுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

நிலைத்த மேம்பாட்டிற்கான ஐ.நா. ஆணையமானது ஏப்ரல்1995ல் நடத்தியதனது மூன்றாவது மாநாட்டு அறிக்கையில் 'மலைவாழ் மக்களின் பண்பாட்டை மீட்கவும், பாதுகாக்கவும் உதவி தேவைப்படுகிறது. ஏனென்றால் அப்பண்பாடானது மலை வளங்களை நீடித்துப் பயன்படுத்துவதையும், பாதுகாப்பதையும் உறுதியாக ஆதரிப்பவையாக உள்ளன' என்று குறிப்பிட்டுள்ளது.

மலைப்பகுதிகளில்நீடித்த நிலைத்த தன்மையை பாதுகாப்பதில் உள்ள பிரச்சினைகளில், அவை சுற்றுலா மையங்களாக்கப்படுவதும் ஒன்றாகும். கட்டுப்படுத்தப்பட்ட சுற்றுலாவால் மலைப்பகுதி மக்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்று கூறப்பட்டாலும் அதனால் பெரும் சுற்றுச்சூழல், பண்பாட்டுச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

தற்போது, பரவலாக, பொதுப்படையாகப் பேசப்படும் வளர்ச்சி நடவடிக்கைகளால்மலைப்பகுதிகளின் சூழலமைவும் மலை மக்களும் அழிவின் விளிம்பில் தள்ளப்படுகின்றன. மலையிலிருந்து தாது, இயற்கை வளங்களை எடுக்க வழங்கப்படும் அனுமதிகளால் உள்ளூர் மக்களுக்கு எவ்விதப் பலனும் இல்லை; மாறாக அழிவே அதிகம்.

மனித குலத்தில் பாதிப் பேர் தம் நன்னீர்த்தேவைக்கு மலைகளில் இருந்து வரும் ஆறுகள், நீர் நிலைகளையே நம்பியுள்ளனர். மலைச்சரிவுகளில் உள்ள தாவர வகைகள் அழிக்கப்படுவதால் மண் சரிவுகள் ஏற்படுகின்றன. பொருத்தமற்ற வே[illegible] நடவடிக்கைகளை மே[illegible]காள்வதாலும் மரம் வெட்டுதல், சுரங்கம் தோண்டல், சாலை அமைத்தல் போன்றவற்றாலும் இந்த அழிவுகள் அதிகரிக்கின்றன.

இன்றைய உலகில் மலைவாழ்மக்களே மிக ஏழைகளும் மிகப்பின்தங்கியவர்களுமாவர் கல்வி இன்மை, முடிவெடுக்கும் அதிகாரம் இன்மை, பொருளாதார வளமின்மை, நில உரிமை இன்மை என பல வழிகளில் இம்மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். மதிப்புமிக்க இயற்கை வளங்களைக் கொண்டிருந்தாலும், அதற்கீடான பயன் அம்மக்களுக்குக் கிடைக்கவில்லை.

மரக்கட்டை, மூலிகைகள் கானகஉணவுகள், தாதுக்கள் நீர் மின் நிலையங்கள் போன்றவை மலைப்பகுதிகளிலேயே இருந்தாலும் இவ்வளங்களில் ஆகப் பெரும் பங்கை பள்ளத்தாக்குகளிலும், சமவெளிகளிலும் வாழும் பல கோடிக் கணக்கான மக்கள்தான்பெறுகின்றனரேதவிர மலைமக்கள் அல்ல. எடுத்துக்காட்டாக, 1890 முதல் 1910ம் ஆண்டிற்குள் அமெரிக்காவின் மேற்கு விர்ஜினியாவில் இருந்த பழம்பெரும் காட்டுமரங்களில் 90% வெட்டப்பட்டன. இது போன்ற நிலையே தற்போதும் உலகின் பல மலைக் காடுகளில் நடைபெற்று வருகிறது.

உள்நாட்டுப் போர்கள் அண்டை நாடுடனான போர்கள், எல்லை தாண்டிய போர்கள் எனப்போர் நடவடிக்கைகளாலும் மலைகள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன. மலைவளக் குறைப்பில் மரம் வெட்டும் பன்னாட்டு நிறுவனங்கள்: கடத்தல்காரர்கள் என பல தரப்பினருக்கும் பெரும் பங்கு உண்டு. போர்கள், மலைமக்களின் வறுமை உள்ளிட்ட பலகாரணங்களால் மலைகளின் சூழலமைப்பும், அதை நம்பி வாழும் உயிரினங்களும் அழிவபாயத்தை எட்டியுள்ளன. உலகிலிருந்து மலைக்காடுகளே முற்றிலும் அழிக்கப்பட்டுவிடும் நிலையிலிருந்து காற்பாற்றப்பட விழிப்புணர்வூட்டும் பொருட்டு இந்த ஆண்டை ஐ.நா. சபையானதுசர்வதேச மலைகளின் ஆண்டாக அறிவித்துள்ளது.

ஐ.நா.உணவு,வேளாண் அமைப்பின் பொதுச் செயலரான ஜாக்குயிஸ் டியோஃப், தற்போது உலகில் 23 முதல் 27 இடங்களில் போர்கள் நடைபெற்று வருகின்றன. அதில் பெரும்பாலானவை மலைப்பகுதிகளிலேயே நடைபெற்று வருகின்றன. உலகிலுள்ள வறிய, பட்டினியால் வாடும் மக்களின் உணவுத் தேவையை நிறைவேற்ற வேண்டுமானால் முதலில் இந்தப் போர்கள் நிறுத்தப்பட்டு அமைதி நிலவ வேண்டும். இச்சண்டைகள்தான் நமது குறிக்கோளை எட்ட மிகப்பெரும் தடையாக இருக்கின்றன. அமைதி நிலவாமல் நாம் உணவுத் தேவையை நிறைவேற்ற முடியாது. அமைதியின்றி நீடித்த, நிலைத்த மேம்பாட்டைப் பற்றி கூட நாம் நினைத்துப் பார்க்க முடியாது.

அனைத்து அரசுகளும் மலைகளின் சூழலமைவைக் காக்கும் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். முக்கியமாக, இப் பணியில் மலைகளில் வாழும் மக்களை ஈடுபடுத்த வேண்டும். அவர்களின் உதவியின்றி நீண்டகாலத் தீர்வுகளை ஏற்படுத்த முடியாது'' என்று கூறுகிறார்.

மலைகளின் ஆண்டையொட்டி அறிக்கை வெளியிட்டுள்ள ஐ நா.பொதுச்செயலர் கோஃபி அன்னான், ''கடந்த 10 முதல் 20 ஆண்டுகளில் பெருமளவு மலைக்காடுகள் அழிக்கப்பட்டிருப்பதை செயற்கைக்கோள் புகைப்படங்கள் காட்டுகின்றன. இதனால் ஏற்பட்டுள்ள வாழிடம் இழப்பாலும், காலநிலை மாற்றத்தாலும் மலைவாழ் உயிரினங்கள் அழிவபாயத்தில் தள்ளப்பட்டுள்ளன. மலைப்பகுதிகளிலுள்ள ஆறுகளும் நீர்நிலைகளும் சீர்கேடடைவதுடன் மாசுபடுத்தப்பட்டும் உள்ளன.

உள்நாட்டு மரபுகளும் அறிவு வளங்களும் அழிந்து வருகின்றன. மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கும் பாதுகாப்பிற்கும் இடையே நாம் கவனமாகச் செயல்பட வேண்டும். ஐ நா. உணவு, வேளாண் நிறுவனமானது பிற ஐ.நா. அமைப்புகளுடனும் சேர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த இருக்கின்றன. மலைவாழ் மக்கள், சுற்றுலா நடத்துநர்கள், சுற்றுச்சூழல் வாதிகள், தனியார் துறை

(8-ம் பக்கம் பார்க்க)

ஈழ சுதந்திரன்

மாத இதழ் சந்தா விபரம்

இந்தியாவில் ஓராண்டு சந்தா ரூ. 80-00

வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10

அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழசுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தா சேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளவும்.

ஈழசுதந்திரன்
14, சேட்காலனி முதல் தெரு.
மூன்றாம் மாடி,
எழும்பூர், சென்னை-600008

கை வைத்தியம்

## வயிறு

வயிற்றிலிருந்த பிள்ளை கீழே விழ: அதி மதுரம், தேவதாரம் வகைக்குப் பலம் 1 வெந்நீர் விட்டரைத்துக் கலக்கி 2 வேளை உள்ளுக்குக் கொடுக்கப் பிள்ளை கீழே விழும்.

வயிற்றுப் பூச்சிகள் விலக: தேங்காயை நெல்லுடன் போட்டு வேகவைத்து எடுத்துச் சிறுவர்க்குக் கொடுக்க வயிற்றிலுள்ள கிருமிகள் வந்து விடும்.

வயிற்றுப் போக்கு: காய்ச்சுக் கட்டியைப் பொடித்து 5 அல்லது 7 குன்றி மணி எடுத்துத் தேனிலாவது ஜெல்லத்திலாவது மந்தித்துக் கொடுத்தால் வயிற்றுப் போக்கு குணமாகும்; வயிற்றுப் போக்கு கண்டிருக்கும்போது காய்ச்சலில்லாதிருந்தால் மேற்படி சிகிச்சை செய்ய வேண்டும். காய்ச்சல் இருந்தால் கூடாது.

வயிற்றில் மரித்த பிள்ளைக்கு: வசம்பும் பெருங்காயமும் முலைப்பால் விட்டரைத்து அடிவயிற்றில் தடவினால் வயிற்றில் மரித்த பிள்ளை கீழே விழும்.

வயிற்றெரிவு: கோவைப்பழம், எலுமிச்சங்காய் அளவு அரைத்துப் பசுவின் வெண்ணெயில் இழைத்து 3 நாள் கொடுத்து வரச் சகல எரிவுகளும் தீரும். இச்சாபத்தியம்.

வயிற்றில் மரித்த பிண்டம் வெளிப்பட: குங்குமப் பூவைப் பன்னீர் விட்டரைத்துப் புளியங்கொட்டை அளவு உள்ளுக்குக் கொடுத்துவிட்டு உடனே ஒரு குன்றி மணி அளவு கற்பூரம் போட்டுக் காய்ச்சி இரண்டவுன்சு வெந்நீர் புகட்டினால் வயிற்றில் மரித்த பிண்டம் உடனே வெளிவரும்.

வயிற்று நோய் அல்லது கடுப்புக்கு: லவங்கப்பட்டை அரப்பலம் எடுத்து எருமைத் தயிர் விட்டரைத்து அந்த மொந்தையை அரைக்கால்படி எருமை மோரில் கலந்து கொடுக்க வயிற்று நோய் தீரும்.

சவர்க்காரத்தை அறைத்து மெல்லிய துணியில் துவைத்து உலர்த்தித் திரியாக்கிக் கத்தரித்து உலர்த்தி யோனியில் சொருகி வைக்க மரித்த பிண்டம் வெளிப்படும்; உதிரச் சிக்கலும் ஆறும்.

வயிற்று வலி வாய்விற்குச் சூரணம்: பிரண்டை வேர் 5 பலம், சவுக்காரம், இந்துப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, பாறையுப்பு வகைக்கு ஒன்றரை பலம், இவைகளெல்லாம் சேர்த்து இடித்துச் சூரணம் செய்து, படி நீரில் 3நாள் ஊற வைத்து இறுத்துப் போட்டுத் தூளாக்கி வைத்துக்கொண்டு வேளைக்கு வெருகடி பிரமாணம் 20 நாள் சாப்பிடவும்; இச்சாபத்தியம்

வயிறு முட்டுக்கு: சீயக்காயை வேக வைத்துக் கால் ஆழாக்குத் தண்ணீர் இருத்து, அதில் ஒரு எலுமிச்சம் பழம் பிழிந்து கொடுக்க உடனே மலம், சிறுநீர் உடையும்.

மருத்துவரைக் கேட்போம்

# அதிக ஜாக்கிங் ஆபத்தானதா?

டாக்டர் பத்மா சமரசம் எம்.பி.பி.எஸ்., டி.எம்.சி.எச்.

● கேரட் சாப்பிடுவதால் கண் பார்வைக் குறைவு சரியாகி விடும் என்பது உண்மையா?

-வேல்வன், ராமாபாளையம்

இது முழுவதும் உண்மையல்ல, ஓரளவுதான் உண்மை. கேரட்டிலுள்ள வைட்டமின் 'ஏ' சத்து கண்ணுக்கு நல்லது: ஆனால் இது பார்வைக் குறையை அடியோடு நீக்கிவிடும் என்பது தவறு. அது மட்டுமல்ல, அதிகமான 'ஏ' உயிர்ச்சத்து சில தீமைகளையும் விளைவிக்கும். உடல் ஓரளவு மட்டும் உயிர்ச் சத்துக்களைச் சேர்த்து வைக்கும். எனவே அளவோடு கேரட்டுகளைச் சாப்பிட்டால் கண் பார்வைக்கு நல்லது.

● 80 வயதுள்ள என் தந்தைக்கு கண்புரை அறுவைச் சிகிச்சை செய்வதால் ஏதாவது பிரச்சினைகள் ஏற்படுமா?

-நல்லதம்பி, வந்தவாசி

வயதுக்கும், கண்புரை அறுவைச் சிகிச்சைக்கும் தொடர்பில்லை. ஆனால் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்கு எந்த வயதாக இருந்தாலும் சர்க்கரை வியாதி, இரத்தக் கொதிப்பு இருக்கக் கூடாது. உங்கள் தந்தைக்கு இந்தப் பிரச்சினைகள் இல்லையெனில் கண்புரையை நீக்குவதில் ஏதும் பிரச்சினை இருக்காது. இவை இருந்தாலும் இவைகளைக் குறைத்து ஒரு கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்த பின்னர் அறுவைச் சிகிச்சை செய்யலாம்.

● எனக்கு கொலஸ்ட்ரால் அதிகமாக உள்ளது. இதனால் இருதய நோய் வருமா?

-மாணிக்கம், ஊதகை

கொலஸ்ட்ரால் என்ற வார்த்தையைக் கண்டு பலரும் பயப்படுகின்றனர். அது தேவையற்றது. இது கொழுப்புச் சத்தும், புரதச் சத்தும் சேர்ந்த ஒரு லிப்போ புரட்டின் (Lipo Protein) என அழைக்கப்படுகிறது. இது குறைந்த அடர்த்தி உள்ளது, அதிக அடர்த்தி உள்ளது என இரு வகைப்படும். அடர்த்தி அதிகம் உள்ளதால் ஆபத்து எதுவுமில்லை. குறைந்த அடர்த்தியுள்ள LDL எனப்படும். (Low Density Lipo Protein) மட்டுமே தீமையானது. இது இரத்தக் குழாயின் உட்பக்கத்தில் படிந்து அதன் உள்ளளவைக் குறைத்து விடும். இதனால் மூளை, இருதய நோய்கள் ஏற்படும். முறையாக மருந்துவமும், அளவான உணவும் இந்த வகைக் கொழுப்பைக் (LDL) குறைக்க உதவும்.

● ஜாகிங் அதிகமாகச் செய்வது ஆபத்தானது என்பது உண்மையா?

-மணியரசு, பல்லாவரம்

நம்து நாட்டில் ஜாகிங் செய்பவர்களே குறைவு. அதிகமாகச் செய்பவர்கள் இருக்கிறார்களா எனத் தெரியவில்லை. காலை அழுத்தி வைத்து ஓடுவதால் சிவப்பு இரத்த அணுக்கள் சிதைந்து விடுகின்றன. எனவே அதிகமாக ஜாகிங் செய்தால் காலின் இரத்தக் குழாய்களிலுள்ள சிவப்பு அணுக்கள் நசுங்கி, அவைகளினுள்ளேயே இருக்கும் ஈமோகுளோபின் இரத்தத்திலும், சிறுநீரிலும் கலக்கும். நீண்ட நேரம் தொடர்ந்து நடக்கும் இராணுவ வீரர்களுக்கும், அதிகமாக ஓடும் ஓட்டப் பந்தய வீரர்களுக்கும் இத்தகைய இரத்தச் சோகை ஏற்படுவதுண்டு. இது அதிகமாக ஜாகிங் செய்தால் மட்டுமே ஏற்பட வாய்ப்புள்ளது. அளவோடு செய்வது ஆபத்தானதல்ல.

● எனக்கு அடிவயிற்றில் வலி இருக்கிறது, இதனால் சினைப்பையில் கட்டி இருக்க வாய்ப்புள்ளதா?

-எழிலரசி, புதுக்கோட்டை

சினைப்பையின் உள்ளே அல்லது வெளியே கட்டி ஏற்படும். இது ஒரு சிறிய பலூனில் தண்ணீர் இருப்பது போலிருக்கும் சில சிறிய கட்டிகளில் புற்றுநோய் ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும். இவைகள் மௌனமான புற்றுநோய் (Silent Cencer) எனப்படும். இவை எந்த அறிகுறியுமின்றிப் புற்றுநோய்க் கட்டிகளாகி உடலில் பரவும். எந்தக் கட்டி எப்போது புற்றுநோயாக மாறும் எனக் கூற முடியாது. எனவே ஸ்கேன் எடுத்துப் பார்த்துச் சினைப்பைக் கட்டிகளை உடனே அகற்றுவது நல்லது. அகற்றிய கட்டிகளில் புற்றுநோய்ப் பாதிப்பு இருக்கிறதா எனப் பார்த்து, இருந்தால் மேலும் பரவாமலிருக்க மருத்துவம் செய்ய வேண்டும்.

● ''ஸ்ட்ரோக்'' என்ற பக்கவாதநோய் எதனால் ஏற்படுகிறது?

-சுந்தரம், மதுரை

இது பல வகைப்படும். சிலருக்குப் பேச முடியாமல் போகும். சிலருக்குக் கண்பார்வை பாதிக்கும். சிலருக்குக் கை, கால்கள் அசைக்க முடியாது. சிலர் மூச்சுவிட முடியாமல் உயிரையும் இழப்பர். இவை அனைத்தும் மூளையில் அந்தக் குறிப்பிட்ட பகுதிக்கு இரத்தம் செல்வது தடைபடுவதால் ஏற்படுகின்றன. பிராணவாயும், சத்துக்களும் கிடைக்காத இரத்த அணுக்கள் இறக்கின்றன. உடனே அந்த அணுக்கள் ஆளுகையிலுள்ள உறுப்புகள் செயல்பட முடியாமல் போகின்றன. இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படுவதாலும், இரத்தக் குழாய்கள் அறுந்து விடுவதாலும்கூட இப்பாதிப்பு ஏற்படும். இறந்த இரத்த அணுக்களைப் புதுப்பித்துச் செயல்பட வைப்பதாலும், அறுந்த இரத்தக் குழாய்களைச் சரிப்படுத்துவதாலும் இந்நோயைக் குணமாக்க முடியும். பாதிக்கப்பட்டவர்கள் நம்பிக்கை இழக்காமல் செயல்பட்டால் இதைச் சரி செய்ய இயலும்.

● எனக்கு 2 மாதம் கர்ப்பம். அடிக்கடி வயிற்றுவலி இருக்கிறது. கருக்குழாயில் கர்ப்பம் இருக்கலாம் என எங்களூர் மருத்துவர் கூறுகிறார். இதற்கு வாய்ப்பு இருக்கிறதா?

-கண்ணம்மாள், சாத்தனூர்

கருக்குழாயில் கர்ப்பம் என மருத்துவர் கூறினால் தவறாக இருக்க வாய்ப்பில்லை. அவ்வாறு கருவுற்றிருந்தால் இது ஆபத்தானது. உடனே அறுவைச் சிகிச்சை செய்து அகற்ற வேண்டும். இல்லையேல் கருக்குழாய் வெடித்து உங்கள் உயிருக்கே ஆபத்து ஏற்படும். இதுபோன்ற நேரங்களில் பத்திரிகைகளுக்கு எழுதி ஆலோசனை கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது. உடனே அறுவைச் சிகிச்சை செய்து அதனை அகற்றவும்.

## போர்...

(7-ம பக்கத் தொடர்ச்சி)

யினர் என அனைவரும் இப்பணியில் ஈடுபட வேண்டும்'' என்கிறார்.

நமது நிலை என்ன? தேயிலை, காபி, பணப்பயிர்களால் நமது வளமான மலைக் காடுகள் அழிக்கப்பட்டு விட்டன. இதனால் அப்பகுதியிலிருந்த பல உயிரினங்கள் நம் கவனத்திற்கு வராமலேயே அழிந்துபோய் விட்டன கொல்லிமலை போன்ற இடங்களில் நடைபெறும் கனிமச் சுரண்டலும், கல்லுடைப்பும், மரவெட்டலும், மூலிகை கடத்தலும் நமது மலைக்காட்டு வளத்தை அழித்து வருகின்றன.

எனினும், இந்திய கானக ஆய்வுத்துறை 1999-ல் வெளியிட்ட ஏழாவது மதிப்பீட்டு அறிக்கையானது இந்தியாவின் மொத்த காடுகளின் பரப்பளவு 63.73 கோடி எக்டேர் என்று தெரிவிக்கிறது. இது நாட்டின் நிலப்பரப்பில் 19.39% மட்டுமே நலமான வாழ்வுக்கு 33% தேவை. 1997ஆம் ஆண்டை விட இது 3,896 சதுரகிலோ மீட்டர் அதிகம் என்கிறது அந்த ஆய்வு. ஆனால், கானக அதிகரிப்பில் ஆந்திரா, மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், இமாச்சலபிரதேசம், மராட்டியம் ஆகிய மாநிலங்கள்தான் இடம் பெற்றிருக்கின்றனவே தவிர தமிழகம் இடம்பெறவில்லை.

சர்வதேச மலைகளின் ஆண்டைக் கொண்டாடும் வகையில் நேபாளத்தில் 'மலைப்பெண்களைக் கொண்டாடுதல்' என்ற உலகளாவிய மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'இந்த சர்வதேச மாநாடானது உள்ளூரளவிலும் சர்வதேச அளவிலும் மேம்பாட்டுப் பணிகளில் மலைப் பெண்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதாகவும் அரசுகளின் கொள்கைகள், திட்டங்களைப் பெண்ணியப் பார்வையில் ஆராய்வதாகவும் இருக்கும். இவை சட்டங்களும் திட்டங்களும் இப்பெண்களையும் அச்சமூகங்களையும் ஊக்குவிக்கும் வகையிலமைந்திட உதவும்' என்கிறார் இம்மாநாட்டின் துணை அமைப்பாளரான ஒஜாஸ்வி ஜோஸ்.

இது போன்ற விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள் மூலம் மலைப்பகுதியின் சுற்றுச்சூழல் சிக்கல்கள், மக்களின் சிக்கல்களை வெளிப்படுத்தி அவற்றுக்குத் தீர்வு காண உதவ முடியும்.

-சிட்டு

நன்றி 'புதியகல்வி'

## தாய்மொழியின் சிறப்பு

தன்னுடைய தாய்மொழியை நன்கு அறியாத ஒருவன் பிறமொழிகளில் புலமை பெறுவது என்பது இயலாத ஒன்று.

-பேரறிஞர் பெர்னாட் ஷா

ஒருவன் மற்ற அறிவுத் துறைகளைக் கற்கலாம் அல்லது கற்காமலும் இருக்கலாம், ஆனால் தாய் மொழியைக் கற்றே ஆக வேண்டும்.

-ஹன்றி பிரார் ப்ரூக்

நாம் அறிவியலில் முன்னேற்றமடைய வேண்டுமானால் அது வழக்கில் நிலைத்து நின்று, நமது உயிரோடு உயிராய்க் கலந்துவிட்ட தமிழ்மொழியின் மூலமாகத்தான் அடைய முடியும்.

-எஸ். வையாபுரிப்பிள்ளை

''முஸ்லிம்கள் தாயகம் வடக்கு கிழக்கே''

## 'பொங்கு தமிழ்' பாணியிலே நிகழ்ச்சி நடத்தி தீர்மனம் நிறைவேற்றுகின்றனர்

முஸ்லிம் மாணவர்கள் முஸ்தீபு

பல்கலைக் கழக முஸ்லிம் மாணவர்கள் ஒன்று கூடி 'பொங்கு தமிழ்' பாணியில் கல்முனையில் ஏப்ரல் 20ஆம் திகதி நிகழ்ச்சி நடத்தி ''முஸ்லிம்களின் தாயகம் வடக்கு கிழக்கே'' என்றதீர்மானத்தை நிறைவேற்றுகின்றனர். இதற்கான முயற்சிகளை சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் இரு மாதங்களுக்கு முன்பே தொடங்கி விட்டனர்.

இந்நிகழ்ச்சியில் இலங்கை முழுவதிலுமிருந்து முஸ்லிம் எம்.பி.க்கள் மற்றும் அனைத்துக் கட்சிகளிலும் உள்ள முஸ்லிம்கள் கலந்து கொள்கிறார்களாம்.

இதுபற்றி கல்முனையைச் சேர்ந்த முன்பு தமிழரசுக் கட்சியில் அங்கம் வகித்த ஒரு முஸ்லிம் வயோதிபர் கூறுகையில் ''நாங்கள் முன்பு தமிழ் பேசும் மக்கள் எல்லாம் ஒரே தேசிய இனம். அந்த வகையில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் வடக்குக் கிழக்கே பாரம்பரியத்தாயகம் அதுதான் தமிழீழம். எனவே இலங்கையை தமிழீழமும் சிறீலங்காவும் கொண்ட ஒரு சமஷ்டியாக அறிவிக்க வேண்டும் என்று சொன்னபோது, 'அதெப்படி முடியும்? முஸ்லிம்களில் 60 சதவிகிதம் பேர் சிங்களப் பகுதிகளில் வாழ்ந்து வரும் நிலையில், மொத்த முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் சிறீலங்காப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருக்கையில் இந்த வடக்கு கிழக்குத்தாயகம் என்றகோட்பாட்டை ஏற்க முடியாது. ஏனெனில் அது முஸ்லிம்களின் நலனுக்கு எதிரானது' என்று சொன்னவர்கள், முஸ்லிம்கள் தமிழரசுக் கட்சியில் அங்கம் வகிப்பதைக் குறை கூறியவர்கள் இன்று அதையே செய்யமுற்படுவது காலத்தின் கோலம்தான். இதிலாவது இவர்கள் உறுதியாக நிற்க வேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சிக்குக் கிடைத்த வரவேற்பின் எதிரொலியே இது என்று பொதுவானவர்கள் இது பற்றிக் கருதுகின்றனர்.

ஈழத் தமிழர் வரலாறு

# யாழ்ப்பாண இராச்சியம்

கலாநிதி சி. க. சிற்றம்பலம்
(வரலாற்றுத்துறை - யாழ். பல்கலைக்கழகம்)

## தொல்லியற் பின்னணி

இங்கே 'நாகதீபம்' எனப் பாளி நூல்களிலும் 'நாகநாடு' எனத் தமிழ் நூல்களிலுங் கூறப்படும் பகுதி ஆதிகாலத்தில் இருந்தே மக்கள் நடமாட்டத்திற்குரிய இடமாக விளங்கியதென்பது புலனாகின்றது. கற்கால மக்கள் இங்கு வாழ்ந்ததை உறுதிப்படுத்துந் தடயங்களாகக் கற்கால (இடைக்கற்கால/குறுணிக்கற்கால) ஆயுதங்கள் காணப்படுகின்றன. இவர்களையே இலக்கியங்கள் யக்ஷர்கள், நாகர்கள் என அழைக்கின்றன.

ஆனால், இவர்கள் விட்டுச் சென்ற கல்லாயுதங்கள் மட்டுமன்றி ஈழத்தின் பல பகுதிகளிலுங் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் இவர்கள் மனிதர்களே என்பதையும். இவர்கள் சந்ததியினரே வேடர் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளன. 96 யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்களிலும் ஆதிக் குடிகளாக யக்ஷர்களோடு (இராட்சதர்கள்) வேடர்களும் குறிக்கப்படுவது ஈண்டு அவதானிக்கத்தக்கது. 97

இவர்களை மானிடவியலாளர் ஒஸ்ரலோயிட் வர்க்கத்தினர் என இனங்கண்டு கொண்டுள்ளனர். இவர்கள் பேசிய மொழி ஒஸ்ரிக் மொழியாகும், பிற்காலச் சிங்கள-தமிழ் மக்களின் மூதாதையினரோடு இவர்கள் கலந்து உருவாக்கிய நாகரிகமே ஈழத்து நாகரிகமாகும்.

வரலாற்றுக் காலத்திலும் வரலாற்றுதய காலத்திலும் வாழ்ந்த மக்களே ஈழம் முழுவதும் காணப்பட்டதை அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் மட்டுமன்றி, ஈழத்தின் மிகப்பழைய கல்வெட்டுக்களான கி.மு. 3ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதிக்குரிய பிராமிக் கல்வெட்டுகளும் எடுத்துக் காட்டுகின்றன.

வரலாற்றுக் காலத்திற் புதிய மக்கள் ஈழத்திற்கு வரவில்லை என்பதையும், வரலாற்றுதய காலத்தில் ஈழத்தினை அடைந்த பெருங்கற்கால மக்கட் கூட்டத்தினரே தொடர்ந்தும் இங்கு வாழ்ந்தனர் என்பதையும், பெருங்கற்காலக் கலாச்சார மையங்களோடு காணப்படும் இக்கல்வெட்டுகள் எடுத்துக் காட்டியுள்ளதோடு இக்கல்வெட்டுகளிற் காணப்படுங் குறியீடுகளுக்கும் பெருங்கற்காலக் கலாசார மட்பாண்டங்களிலே காணப்படுங் குறியீடுகளுக்குமிடையே இழைவிட்டோடும் ஒற்றுமை இதனை மேலும் உறுதி செய்கின்றது.

பொதுவாகவே இப்பிராமி வரிவடிவம் ஈழத்தின் வரலாற்றுக்கால முதல் மன்னனாகிய தேவநம்பியதீஸன் காலத்திலேதான் ஈழத்திற்குப் பௌத்தத்துடன் அறிமுகமாகியது என்று கொள்ளப்பட்டாலுங்கூட இதற்குச் சில நூற்றாண்டுகட்கு முன்னரே தென்னிந்தியப் பிராமி வரிவடிவம் ஒன்று தமிழகம்-ஈழம் போன்ற இடங்களிற் காணப்பட்டதை அறிஞர் சுட்டிக் காட்டியுள்ளனர். இத்தகைய வரிவடிவத்தினை பியூலர் 'திராவிடி வரிவடிவம்' எனக் கூறியுள்ளார். 98 இக் கருத்தையே பெர்ணாண்டோ, 99 கருணரத்தினா 100 ஆகியோர் ஏற்றுள்ளனர். இவ் வரி வடிவத்தினை நாகசுவாமி 101 'தமிழி வரிவடிவம்' என அழைக்கின்றார்.

இத்தகைய கருத்தினையே அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளும் உறுதி செய்கின்றமை தெரிகின்றது. அநுராதபுரத்தில் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் வரலாற்றுக் காலத்தின ஆரம்பமாகிய கி.மு. 250 ஆம் ஆண்டுகளுக்கு முன்னரேயே இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் பிராமி வரிவடிவத்தினை அறிந்திருந்தனர் என்பதனை எடுத்துக் காட்டி உள்ளன.

இப்பிராமி வரிவடிவமுள்ள மட்பாண்ட ஓடுகள் காணப்படுங் கலாசாரப்படையின் காலம் கி.மு 750 ஆம் ஆண்டாக இருந்திருக்கலாம் என்பதை இப்படையிற் கிடைத்துள்ள பொருட்களை C.14 காலக் கணிப்புக்கு உட்படுத்தியபோது தெரிய வந்துள்ளது. 102 இப்பின்னணியிற்றான் 1947இல் தமிழகத்தில் உள்ள அரிக்கமேட்டிற் கசல் என்ற ஆய்வாளர் வரலாற்றுதய காலத்திற்குரிய பெருங்கற்காலக் கலாசாரப் படையிற் கண்டெடுத்தபிராமி வரிவடிவம் பொறித்த மட்பாண்ட ஓடு ஒன்றும் முக்கியம் பெறுகின்றது.

இது பற்றிப் பின்வந்த ஆய்வாளர்கள் அதிக அக்கறை செலுத்தாத போதிலும் அண்மைக் காலத்தில் அரிக்கமேட்டு அகழ்வுகளை ஆய்வு செய்த திருமதி விமலா பேக்லே இப்பகுதியிற் கி.மு. 9ஆம் நூற்றாண்டிற் பெருங்கற்கால மக்கள் நடமாடியதற்கான தடயங்கள் உண்டு என்பதை எடுத்துக் காட்டியமையை ஏற்றுள்ள கிரன் தொணியகலவும் அநுராதபுரம்-அரிக்கமேடு ஆகிய இடங்களில் இத்தகைய பிராமி வரிவடிவம் பொறித்த மட்பாண்டங்கள் சமகாலத்தவை எனக் கூறுகின்றார். 103

இதனால் ஈழத்தின் வரலாற்றுக் காலத்தின் ஆரம்பத்தை கி.மு. 250 எனக் கொள்வது மரபு எனினும் இதன் தொடக்கம் கி.மு. 600-500 ஆண்டு காலமாக இருக்கலாம் எனவும் இவர் கருதுவர். 104

எனவே தமிழகம், ஈழம் ஆகிய பகுதிகளிற் கிடைத்துள்ள சான்றுகளை உற்று நோக்கும்போது வரலாற்றுக்கு முற்பட்ட வரலாற்றுதய காலங்களில் இரு பகுதிகளும் நெருங்கிய உறவு கொண்டிருந்தமை தெரிகின்றது.

ஈழத்திற் கிடைத்துள்ள வரலாற்றுக்கு முற்பட்ட, குறுணிக் கற்கால ஆயுதங்களுக்கும் தமிழகத்திற் சமகாலத்திற் கிடைத்த ஆயுதங்களுக்குமிடையே நெருங்கிய ஒற்றுமை காணப்படுவது போல இருபகுதிகளின் வரலாற்றுதய காலச் சின்னங்களான பெருங்கற்கால ஈமச் சின்னங்களுக்கிடையேயும் இத்தகைய ஒற்றுமை தென்படுகின்றது. இவ்வொற்றுமையே மேலும் ஈமச் சின்னங்களிற் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள், எலும்புக்கூடுகள் ஆகியனவும் உறுதி செய்கின்றன.

இதனாலே தென்னிந்தியாவைப் போல ஈழத்தின்-நாகரிகத்தினை வளர்த்தெடுத்த வரலாற்றுக் கால மக்கள் என்பதனை இரு பகுதிகளிலுங் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் உறுதி செய்துள்ளன. ஆனைக்கோட்டை எலும்புக்கூடுகளை அறிஞர்கள் ஆய்வு செய்வதற்கான சந்தர்ப்பங் கிடைக்காத போதிலும் இங்கு கிடைத்த வெண்கலமுத்திரை இப்பகுதி மக்கள் பழந்தமிழராகிய திராவிட மொழிக் கூட்டத்தினரே என்பதை எடுத்துக் காட்டியுள்ளது. தொல்லியற் பின்னணியில் விஜயன் தொட்டுத் தேவநம்பியதீசன் வரையான காலப் பகுதியினை உள்ளடக்கிய தமிழக-ஈழ வரலாறு பற்றிய ஐதீகங்களை நோக்கும் போது இவை ஐதீகங்களாகக் காணப்பட்டபோதிலும் இவற்றின் கருப்பொருளாகத் தென்னிந்திய மக்கள் ஈழத்தின் மீது குடியேறியமை தெரிகின்றது.

இதனால், இன்றைய தமிழ், சிங்கள மொழிகளும், தென்னிந்தியத் தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு ஆகியனவும் ஒரே குடும்ப மொழிகள் என்பதுந் தெளிவாகின்றது. அறிஞர்கள் தற்காலச் சிங்கள மொழியின் ஆதிவடிவத்தை 'எலு' என்பர். திராவிட மொழியாகிய இவ்வெலுவே கி.மு. 3ஆம் நூற்றாண்டிற் பௌத்தத்துடன் இங்கு வந்த பாளிப் பிராகிருதத்தின் செல்வாக்கால் உருமாறி இன்றைய சிங்கள மொழியானது எனலாம். இத்தகைய செல்வாக்குக்கு உட்படாத தமிழ்மொழி பேசியோர் தனித்துவமாக இயங்கியதோடு தமிழகத்துடனும் உறவை வளர்த்துக் கொண்டனர்.

('ஈழத் தமிழர் வரலாறு' என்ற இத் தொடரில் 'யாழ்ப்பாண இராச்சியம்' பகுதி இத்துடன் முற்றுப் பெறுகிறது- ஆசிரியர்)

# செய்து பார்க்கலாம்- விற்று தொழில்செய்யலாம்

### ஆப்பிள் செல்லி

ஆப்பிள் பழத்தை நான்காக வெட்டி, உள்ளேயிருக்கும் கடினப் பகுதியை நீக்கி விடுக. ஐந்து கி.கி. பழத்துண்டை நன்றாக அரைத்து, அரைக்கிலோ தண்ணீர் சேர்த்துக் கொதிக்க வைக்கவும். பிறகு சாற்றை வடித்துக் கொள்க. சாறு எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவு சர்க்கரையை அதில் சேர்க்கவும். அதனுடன் இரண்டு எலுமிச்சம் பழங்களையும் பிழிந்து விடவும் அதை அடுப்பிலேற்றவும். தீயை மெதுவாக-இலேசாக எரிய விடவும். செல்லி தயாரானதும் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

### உப்பு மாங்காய் ஊறுகாய்

நடுத்தர அளவுள்ள மாங்காய் அல்லது புளிப்பு மாங்காய் அல்லது ஊறுகாய் மாங்காய் வேண்டிய அளவு வைத்துக் கொள்க. பொதுவாகக்கொட்டை மாங்காய் சிறந்தது. இதனைப் பில்லை பில்லையாக அறுத்துக் கொள்ளவும்; ஒரு லிட்டர் மாங்காய்ச் சதை;உப்பு ஓர் ஆழக்கு; தண்ணீர் ஒரு படி. இம்மூன்றையும் ஒன்றாய்ச் சேர்த்து ஊற வைக்கவும். இருபது நாட்கள் குலுக்கிக்குலுக்கி வைக்கவும் பிறகு பயன்படுத்தலாம்; காரம் சேர்க்கப்படாததால், உடலுக்குக் கெடுதல் இல்லை. இது நாட்படத்தான் ஊறும்.

### மாங்காய்த் தொக்கு

மாங்காய்த் தொக்குக்கு, நாரில்லாத சதைப்பற்றுள்ள பெரிய மாங்காய்களாக இருக்க வேண்டும். தேங்காய் அளவுள்ள இரண்டு மாங்காய்; வெந்தயம் இரண்டு தேக்கரண்டி, பெருங்காயம் பாக்களவு, மிளகாய் மிளகாய் வற்றல் ஐந்து பலம், உப்பு முக்காலாழாக்கு, கடுகு ஒரு தேக்கரண்டி, நல்லெண்ணெய் இரண்டரைப் பலம்.

மாங்காயை நீரில் நனைத்துச் சுத்தப்படுத்தவும்; மேல் தோலைச் சீவி விடவும்; மாங்காய்த் துருவியினால் துருவி வைத்துக் கொள்ளவும். இதற்கு இரண்டு தேக்கரண்டி எண்ணெய் போதும். பிறகு ஒரு தேக்கரண்டி எண்ணெயில் பெருங்காயத்தைப் பொறித்து வைத்துக் கொள்ளவும். இரு தேக்கரண்டி எண்ணெயில் வெந்தயத்தை வறுத்துக் கொள்ளவும்.

வெந்தயம், பெருங்காயம், மிளகாய் வற்றல் இவற்றைப் பொடி செய்துக் கொள்ளவும். நன்கு மசித்த பின். அவற்றில் உப்பும் மஞ்சள் தூளும் சேர்த்து இடித்துக் கொள்க. இறுதியில் 'வாணலியில் எண்ணெய் ஊற்றி, தேவையான கடுகையும் போட்டு, கடுகு வெடித்த பின், மாங்காய்த் துருவலை அதில் கொட்டித் தட்டையான கரண்டியினால் கிளறவும். ஐந்து மணித் துளிக்குப் பின், மிளகாய்க் கலவையை அதில் கொட்டி நன்கு கிளறவும். பிறகு இறக்கிக்குப்பியிலோ, சாடியிலோ எடுத்து வைத்துக் கொள்க; உணவுடன் பயன்படுத்தலாம்.

குறிப்பு: இதையே பெரிய அளவாக எடுத்துக் கொண்டு விற்பனையும் செய்யலாம்.

## உங்களுக்குத் தெரியுமா?

மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கும்போது நோயாளிகளிடம் அவருக்கு பரிந்துரைக்கும் மருந்தின் பெயர் மற்றும் அந்த மருந்தினை சாப்பிட்டால் வரும் பின் விளைவுகள் உள்பட அனைத்து விபரங்களையும் தெளிவாக தெரிவிக்க வேண்டும். அப்போதுதான் நோயாளுக்கு மன ரீதியாகவும் பலன் உண்டாகுமாம்.

உலக மருத்துவக் கழக சட்டப்படி அப்படி தெரிவிக்காமல் இருப்பது குற்றமாகும். எனவேதான் உலகின் பல நாடுகளில் இப்போது மருத்துவர்கள் தாங்கள் கொடுக்கும் மருத்துச் சீட்டை தெளிவாக கம்ப்யூட்டரில் பிரிண்ட் செய்து கொடுத்து விடுகிறார்கள்.

# ஈழத்தில் அமைதி திரும்புமா அகதிகள் நாடு திரும்பினால்என்னவாகும்?

ச. நடேசலிங்கம்

இலங்கை இனப்பிரச்சினை, தனிச் சிங்களச் சட்டம், இனப்பாகுபாடு, நல்ல திட்டமிட்ட சிங்களர் குடியேற்றம், கல்விக்கான தரப்படுத்தல் போன்றவற்றில் உரிமையை நிலைநாட்ட அகிம்சையில் தொடங்கிய தேசியப் போராட்டம் தற்போது ஆயுதப்போராட்டமாக வலுப்பெற்றுள்ளது. கடந்த 21 ஆண்டுகளுக்கு மேலாக யுத்தத்தின் நெருக்கடியில் மூச்சுத்திணறி தமிழ், சிங்கள மக்கள் பல யுத்த நிறுத்தங்களையும் சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் சந்தித்தும் விட்டார்கள். ஆனால் ஒரு தீர்வு ஏற்படவில்லை. இப்போது மீளவும் யுத்த நிறுத்தமும் (நடைமுறையில் உள்ளது) பேச்சுவார்த்தையும் தொடங்கி விட்டது.

1987ல் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதன் விளைவாக யுத்தம் நிறுத்தப்பட்டது. அந்த வேளை அகதிகள் நாடு திரும்பியது ஏற்கத்தக்கதே. ஆனால் அந்த ஒப்பந்தம் தூக்கியெறியப்பட்டு யுத்த நிறுத்தமும் குலைந்து போய் சண்டை மீள ஆரம்பித்தது. மீள 199 ம் ஆண்டில் யுத்தம் நடைபெற்ற காலத்திலேயே தமிழ்நாட்டில் இருந்த அகதிகள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு பின் சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்கு அமைய விரும்பிச் செல்லும் அகதிகளையே திருப்பியனுப்பும் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. அது தொடரும் வேளையில் இலங்கையில் ஆட்சி மாற்றம். திருமதி சந்திரிகா குமாரணதுங்கே ஜனாதிபதியாக பதவியேற்றார். இதே நிலையிலும் அகதிகள் தாயகம் திரும்பினர். தாங்கள் நாடு சென்றதும் சொந்த இடங்களில்பாதுகாப்புடன்வாழ முடியும்என்ற நம்பிக்கையுடனேயே நாடு திரும்பியவர்கள் அங்கேயும் அகதி முகாம்களில் வாழும் நிலையே தொடர்ந்தது. திருகோணமலையில் அலஸ்தோட்டம், வவுனியாவில் கோயில் குளம், மன்னாரில் மடுமாதா கோயில் போன்ற இடங்களில் ஐக்கிய நாடுகள் ஸ்தானிகராலயத்தால் பராமரிக்கப்பட்ட அகதிமுகாம்களில் பெரும்பான்மையோர் தங்க நேரிட்டது. ஒரு சிறு சதவீதத்தினரே மீளக் குடியேற்றம் என்று சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

ஆனால் தொடர் யுத்தம் காரணமாகத்தாயகம் சென்ற 650 அகதிகளில் 25% 30% மீளவும் இடம் பெயர்ந்தனர். தற்போது மீளப் பேச்சவார்த்தை எப்படிப்போகும் என்ற எதிர்பார்ப்புடன் ஒரு யுத்த நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. ஆனால் கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த நிறுத்தங்களால் பிரச்சினைகளில் உரிய தீர்வு எதுவும்வரவில்லை.

இந்நிலையில் யுத்த நிறுத்தத்தை சாக்காக வைத்து, தமிழ்நாட்டில் தங்கியுள்ள அகதி மக்களை எப்போது நாடு திரும்புவீர்கள், விரும்பிச் செல்ல விருப்பமுடையோர் தங்களைப் பதிவு செய்திடலாம் என்ற குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கி உள்ளது. இலங்கை அகதி மக்களிடம் இலங்கையில் பிரச்சினை தீர்ந்து விட்டதாகக் கூறி நாட்டிற்கு திரும்பிடலாம் எனக்குரல் ஓங்கி ஒலிப்பதற்கு தமிழ் நாட்டில் அகதி முகாம்களுக்கு வெளியே வதியும் இலங்கைத் தமிழர்களே காரணமாக இருக்கின்றனர்.

இவர்களைப் பொறுத்தவரை உறவினர்கள் வெளிநாட்டில் இருந்து அனுப்பும் பணத்தில் பல ஆயிரம் ரூபாய்களுக்கு வீடு வாடகைக்கு எடுத்துத் தங்கியிருந்து கொண்டும் வெளிநாடு செல்ல வாய்ப்புக்களை எதிர்நோக்கிக் கொண்டும் இருக்கும்போது இப்படியான நிலைதோன்றும் போது இலங்கை திரும்பிட விரும்புவது சகஜமே. ஆனால் முகாம்களில் வாழும் மக்கள் தமது பிள்ளைகளின் உயர் கல்வியை மட்டுமே நம்பியிருக்கின்றனர். இந்த நிலையை மக்களுக்கும், இந்திய அரசுக்கும் எடுத்துரைக்கவல்ல இம் முகாம் மக்களுக்குச் சேவையாற்றிவரும் தொண்டு நிறுவனங்களின் இணைப்புக்குழுவானது சட்டப்படி முகாம்களுக்குள் செல்வது தடுக்கப்பட்டுள்ளது. இதனால் முகாம் மக்களின் தற்போதைய உண்மை நிலையைத் தெளிவுபடுத்த முடியாத நிலை உள்ளது. இதேவேளை 93ல் சென்றவர்கள் பலதரப்பட்ட பிரச்சினைகளை இலங்கையில் எதிர்நோக்கியுள்ளார்கள்.

1) பிறப்புச்சான்று-இந்தியப் பிறப்புச்சான்று ஏற்கப்படவில்லை.

2) கல்விச்சான்றுகள்-இங்கு 12ம் வகுப்புப் படித்து சித்தியடைந்தாலும் அங்கு மீளத் தோற்ற வேண்டிய நிலை.

(ஆனால் இங்குஅகதி அடைக்கலம் கொடுத்தநாட்டில் எந்த நிபந்தனைகளும் இன்றி ஏற்கப்பட்டு உயர்கல்வி தொடர வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்கதும்)

இதுபோன்று பலதரப்பட்ட பிரச்சினைகள் உண்டு. இதே வேளை இந்தியாவில் அகதிகள் இருக்கும் வரையே இந்திய அரசினால் இலங்கைத்தமிழர் பிரச்சினையைத் தீர்த்திட இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்திட முடியும். தற்போதுள்ள இலங்கை அரசும் முதல் இருந்த அரசும் இரு சிங்களப் பேரினவாத சக்திகளின் உறைவிடமாகும். யுத்த நிறுத்தம் கையெழுத்தாகும் முன்பே இலங்கைப் பிரதமர் மதிப்பிற்குரிய ரணில் விக்கிரமசிங்கே அவர்கள் வடக்கு கிழக்குப்பகுதி தமிழர்களின் தாயகம் என்பதை ஏற்க முடியாது எனப் பகிரங்கமாக அறிக்கை விட்டார். இதனை எந்தத் தமிழர் கட்சிகளும், போராளிக்குழுக்களும் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

1994ம் ஆண்டு தேர்தலின்போது தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் புகைப்படத்திற்கு குங்குமப்பொட்டு வைத்து, தமிழச்சியாகச் சித்தரித்துக் கேலி செய்த கட்சியே தற்போதைய ஆட்சியில் உள்ளது...

1994ல் ஆட்சிக்குவர தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பேன் என்று கூறி, ஆட்சிக்கு வந்தபின் தமிழர்களை யுத்தத்தின் மூலம் அழித்திட்ட முன்னைய அரசு சார்ந்த கட்சி, இம்முறைத் தேர்தலில் ரணில் தமிழர்களுக்கு அதிக முன்னுரிமை கொடுக்க முயலுகிறார் என்று குற்றம் கூறித் தேர்தலைச் சந்தித்துத் தோல்வி கண்டது.

பிரச்சினைக்குத் தீர்வு எதுவும் ஏற்படாத இந்நிலையில் அகதிகள் நாடு திரும்புவதால் எதிர்நோக்கும் பிரச்சினை ஏராளம். இதை எடுத்துச்சொல்ல அகதி மக்கள் நாதியற்றுப்போய் உள்ளார்கள். நாடு திரும்பிட விருப்பும் அகதிகளைஇலங்கையில் பிரச்சினைக்கு ஒருநல்ல தீர்வுக்கு வந்தபின் திருப்பி அனுப்புவதே சாலச்சிறந்ததாகக் கருதப்படும்...

''யுத்த நிறுத்தம் என்பது இனப்பிரச்சினைக்கான தீர்வு அல்ல'' என்பதை அனைவரும் இந்தருணத்தில் புரிந்து கொள்ள வேண்டும்.

# 'இலக்கியப் பாலம்'

டாக்டர் அ. இரபியுதீன்
(தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம்)

''சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்'' என்று பாடினார், அமரகவி பாரதியார். அவர் அப்படிப் பாடி ஒரு நூற்றாண்டு ஆகி விட்டது. ஆனால், தமிழ்நாட்டையும் இலங்கைத் தீவையும் இணைக்க இன்னும் பாலம் அமைக்கப்படவில்லை.

ஆனால், இலங்கையைச் சேர்ந்த இலக்கியப் புரவலர் காசிம் உமர், தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் இலக்கியப் பாலம் அமைத்துக் கொண்டிருக்கிறார்.

''இலக்கியப் புரவலர்'' என்று போற்றப்படும் முனைவர் காசிம் உமர், கொழும்புவில் ஒரு முன்னணித் தொழிலதிபர், மேமன் (முஸ்லிம்) சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவருடைய முன்னோர் வட இந்தியாவிலிருந்து இலங்கையில் குடியேறியவர்கள்; எனவே, இவரது தாய்மொழி தமிழ் அல்ல என்றாலும், தமிழ் மீது தணியாத காதல் கொண்டு, தமிழ் இலக்கியத்துக்கும், தமிழ் எழுத்தாளர்களுக்கும் தனிப்பெரும் புரவலராக விளங்குகிறார்.

இலங்கையில் நடைபெறும், நூல் வெளியீட்டு விழாக்களில் இந்தப் புரவலரைக் காண முடியும். இவர் தான் முதல்பிரதி பெற்றுச் சிறப்பிப்பார். தமிழ்நாட்டில் நடைபெறும் விழாக்களிலும் கலந்து கொண்டு, முதல்பிரதி பெறுகிறார். இதுவரை(2002 பிப்ரவரி வரை) 261 முதல் பிரதிகள் பெற்றிருக்கிறார். இது'கின்னஸ்'ஏட்டில் இடம் பெறத்தக்க உலக சாதனையாகும்!

இவரது இந்த சாதனையைப் பாராட்டி, அமெரிக்காவிலுள்ள உலகப் பல்கலைக் கழகம் இவருக்கு 'முனைவர்' (டாக்டர்) பட்டம் கொடுத்துச் சிறப்பித்திருக்கிறது.

இந்தப் புரவலர் மார்ச் மாதம் இன்னும் ஒரு புதுமை செய்தார்.

தமிழ்நாட்டிலிருந்து மூன்று தமிழ் எழுத்தாளர்களை கொழும்புக்குக் கூப்பிட்டு விழா நடத்தி, அவர்கள் எழுதிய நூல்களை இலங்கை மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

இலங்கையில் அமைதி திரும்பிய பின்பு நடந்த முதல் தமிழ் நூல் வெளியீட்டு விழா இது. தமிழ்நாட்டிலிருந்து ஒரே நேரத்தில் மூன்று தமிழ் எழுத்தாளர்களை அழைத்து அவர்களை இலங்கை மக்களுக்கு அறிமுகப்படுத்தி, அவர்கள் எழுதிய நூல்களை அறிமுகம் செய்து வைத்ததும் இதுவே முதல் முறை.

1. ஐ. சண்முகநாதன் 'தினத்தந்தி'யின் முன்னாள் ஆசிரியர். இவர் எழுதிய ''ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு வரலாறு'' அரிய நூல் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நூலின் குறுந்தகடும் (சி டி.) விழாவில் வெளியிடப்பட்டது.

2. அ.மா.சாமி 'ராணி' வார இதழின் ஆசிரியர் இவர் எழுதிய ''இந்து சமய இதழ்கள்'' என்ற ஆய்வு நூல்விழாவில் அறிமுகம் செய்யப்பட்டது.

3. தங்க. காமராஜ், வளர்ந்து வரும் எழுத்தாளரான இவரது படைப்பு ''மறக்க முடியுமா'' இந்நூல் விழாவில் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.

நான், உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகப் பொதுச் செயலாளர் முனைவர் அ. அப்துல்பாரி, பொருளாளர் முனைவர் அ. அய்யூப் ஆகிய மூவரும் இந்த விழாவுக்கு சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தோம்.-

அப்போது ஜப்பானிலிருந்த நான், இரவு பகலாக விமானத்தில் பறந்து, விழா அன்று கொழும்புக்குப் போய் சேர்ந்தேன். அய்யூப் பேங்காக்கிலிருந்தும், அப்துல் பாரி சிங்கப்பூரிலிருந்தும் பறந்து வந்தார்கள்.

நாங்கள் மூவருமே இவ்விதம் பறந்துபோய் விழாவில் கலந்து கொண்டதற்கு சில காரணங்கள் இருக்கின்றன. புரவலர் காசிம் உமர்அவர்கள் எங்களின் அருமை நண்பர், உ.த.ப.க.வின் புரவலர். அழைக்கப்பட்ட மூவருமே எங்கள் அன்புக்குரிய ஆசிரியர்கள்; இது இலக்கியப் பாலம் அமைக்கு ஒருவிழா; அந்த விழாவில் எங்கள் பங்கும் இருக்க வேண்டும். நாங்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று மூவருமே ஆசைப்பட்டோம்.

கொழும்பு நகரில் மேமன் சங்க மண்டபத்தில் விழா நடந்தது. மிகச் சிறப்பான விழா எழுத்தாளர்கள், இதழாளர்கள், இலக்கிய ஆர்வலர் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தார்கள் அப்படியிருந்தும் முந்நூறு பேருக்கு மேல் கூடிவிட்டார்கள். விழா பற்றி ஒரு மாதமாகவே செய்தித்தாள்களில் தொடர்ந்து செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன.

விழாவின் முதல் நிகழ்ச்சியாக ''ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு வரலாறு'' என்ற நூலின் அறிமுகமாக 'குறுந்தகடு' ஒளி பரப்பிக் காட்டப்பட்டது. விழாவுக்கு வந்த அத்தனை பேரும் கண் இமைக்காமல் இந்தப் பட்த்தைக் கண்டு களித்தார்கள்.

அதன்பின் நூல்கள் அறிமுக விழா. வள்ளல் தெ ஈஸ்வரன் தலைமை தாங்கினார். ஒரு சில நிமிடமே அவர் பேசினாலும் அவரது உரை சிறப்பாக இருந்தது. கம்ப வாரிதி இ ஜெயராஜ் சிறப்புரை ஆற்றினார். மூன்று ஆசிரியர்

(12-ம் பக்கம் பார்க்க))

PUBLIC LIBRARY
JAFFNA

## செய்திச் சரம்

**21-3-2002**

மதுரை கூடல்புதூர் அகதி முகாமைச் சேர்ந்த இலங்கை அகதி சகாயராஜ் (42) கரிசல்குளம் கண்மாயில் மூழ்கி இறந்தார்.

(தினமணி)

இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு கிழக்குப் பகுதியை தவிர்த்து மற்ற இடங்களில் இன்று உள்ளாட்சி தேர்தல் நடக்கிறது. 222 நகராட்சி மற்றும் கிராம பஞ்சாயத்துக்களில் இன்று தேர்தல் நடைபெற உள்ளது.

(தினகரன்)

**22-3-2002**

இலங்கையில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. இதுவரை அறிவிக்கப்பட்ட 222 கவுன்சிலுக்கான முடிவுகளில் ஆளும் கட்சி 217 கவுன்சில்களில் வெற்றி பெற்றுள்ளது.

(தினமணி, தினகரன், தினமலர்)

**23-3-2002**

இலங்கையில் அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள போர் நிறுத்த உடன்பாட்டை இரு தரப்பினரும் மீறவில்லை. எனவே, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு வேலையே இல்லை என்று அந்நாட்டு அமைச்சர் டெரன் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

(தினமணி)

**24-3-2002**

அமைதிப் பேச்சு வார்த்தை நடத்துவதில் நாங்கள் அவசரம் காட்டமாட்டோம். அதே போல் அரசும் இந்த விசயத்தில் அவசர கதியில் செயல்படக் கூடாது என்று லண்டனில் இருந்து வெளியாகும் புலிகளின் ஆதரவு பத்திரிக்கையான 'தமிழ் கார்டியன்' தனது தலையங்கத்தில் எழுதியுள்ளது.

(தினகரன், தினமலர்)

**25-3-2002**

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் பல ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக சர்வதேச பத்திரிகையாளர்களை வரும் ஏப்ரல்மாதம் சந்திக்க இருப்பதாக புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் 'தி சண்டே லீடர்' இதழுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்

(தினமணி, தினகரன்)

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு திருவில்லிப்புத்தூர் அருகே பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பேரவைத் தலைவர் சுந்தரராஜன்தமிழ் தமிழர் இயக்க பிரதிநிதி பொன். இளங்கோவன் ஆகியோருக்கு நீதிமன்றம் ஓராண்டு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு கூறியுள்ளது.

(தினத்தந்தி)

# ஈ. ஏ. ம. கழகத்தின் மாநில அளவிலான ஏப்ரல் மாதக் கல்விக் குழுக் கூட்டம்

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகக் கல்விக் குழுவின் ஏப்ரல் மாத மாநில அளவிலான கூட்டம் 4-4-2002 அன்று மாலை 4 மணிக்கு சென்னையில் உள்ள தலைமையகத்தில் நடைபெற்றது.

பொருளாளர் சா.செ. சந்திரகாசன், செயலாளர் சூரியகுமாரி வண. சாம். கோயில்பிள்ளை திருமதி. ரெக்ஸ் பிறிஜ்ஜெட், எம்.எஸ். சக்காரியாஸ், எஸ்.என்.எஸ். முருகேசு, சாமுவேல் நடேசலிங்கம், மு. மகேஸ்வரன், இரா. ஈஸ்வரன், ஆ. இளமுருகன், டாக்டர் சுபா. பூங்குன்றன், ந. ரவீந்திரராஜா, சி. அருட்சோதி, பா. காண்டீபன், சி. சிவப்பிரியன், மா. விஜயசிங்கம், சா. செல்வநாயகம், எம். அமல்ராஜ், செல்வி கு. சாந்தகுமாரி ஆகியோர் கலந்து கொண்டனர். தலைவர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சென்றமாதக்கூட்ட அறிக்கையை செல்வன் மா. விஜயசிங்கம் வாசித்தார். இரண்டு திருத்தங்களுடன் அறிக்கை சரியென செல்வி கு. சாந்தகுமாரி முன்மொழிய எம். அமல்ராஜ் வழிமொழிய அறிக்கை ஏற்றுக்கொள்ளப் பட்டது.

திருத்தங்கள் செய்வதற்காகத் தான் அறிக்கைப் பிரதிகள் முன் கூட்டியே மண்டலங்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன. திருத்தங்கள் செய்து அனுப்பினால் முழுமையான அறிக்கை வாசிக்க வசதியாக இருக்கும் எனத் தலைவர் சுட்டிக் காட்டினார்.

### இலங்கை வரலாறு

இலங்கைப் புவியியல் விபரங்கள் பற்றி அறிவதற்கு இலங்கை வரைபடங்கள் வாங்கி மண்டலங்களுக்கு வழங்குவது தொடர்பாகப் பேசப்பட்டபோது பொருளாளர் அவர்கள் கூறுகையில் மாவட்ட வாரியாக வரைபடங்கள் வழங்க ஒழுங்குகள் செய்யும்படியும் அதற்கு மொத்தம் 25 வரைபடங்கள் கொள்வனவு செய்து வழங்கலாம் எனவும் அவற்றை உயர் கல்வி மாணவர்களின் உதவியைப்பெற்று மேலும் வரைபடங்கள் வரைந்து முகாம்களுக்கு வழங்க வேண்டும் எனக் கூறினார். மேலும் அவர் கூறுகையில் 'ஈழத் தமிழர் தொன்மை' ஒரு சிறந்த வரலாற்று நூல் என்றும் அதனை அடிப்படையாக வைத்துப் பல வகையான கதைகளை ஒரு குழு அமைத்து தயாரித்துபோதனை மைய ஆசிரியர்களுக்கு வழங்கினால் மாணவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். அக்குழு வரலாற்று ஆசிரியர்களின் உதவியையும் பெறலாம் எனவும் இதனை JRS நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கலாம் எனவும் கூறினார். மேலும் இது தொடர்பான விளக்கங்களைக் கொண்ட அறிவிப்பினை வண. சாம்கோயில்பிள்ளை அவர்கள் JRS நிறுவனத்திற்கு தெரிவிப்பார் எனவும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

### குறிப்பேடுகள்

குறிப்பேடுகள்தயாரிப்பது ஏறக்குறைய முடிவுக்கட்டத்தில் உள்ளதாகவும், ஜூன் மாத முற்பகுதியில் வழங்கலாம் எனவும் பேசப்பட்டது. எஞ்சியுள்ள குறிப்பேடுகள் தயாரிப்பின் செலவினமும் வாய்பாட்டின் கொள்வனவுச் செலவினமுமாக ரூபாய் 3½லட்சம் கொடுக்கவேண்டும் எனக் கூறப்பட்டது. அதனை வழங்கவும் ஏற்றுக்கொள்ளப் பட்டது. மாணவர்களின் விபரங்கள் குடும்ப விபரத்திரட்டிலிருந்து பெற்றவற்றை முகாம் வாரியாக சேகரித்து ஏப்ரல் மாத இறுதிக்குள் தயாரித்து சமர்ப்பிப்பதாக மண்டலங்கள் ஏற்றுக் கொண்டன. காட்டுமன்னார்க்குடி மாணவர்களிடம் முன்னேற்றம் காணப்படுவதால் அவர்களின் வளர்ச்சிக்கு உதவிடலாம் என ஏற்றுக்கொள்ளப்பட்டது. முகாம்களில்குடும்ப விபரத்திரட்டு சேகரிப்பதற்கு உதவிடும் மாணவர்களுக்கு மட்டுமே குறிப்பேடுகள் வழங்கலாமென ஏற்றுக்கொள்ளப்பட்டது. கடந்த 14ம் திகதி மதுரையில் நடந்த தொண்டுநிறுவனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன் படி அடுத்த வருடம் அக மாணவர்களுக்கான குறிப்பெடுகளை இந்திய மாணவர்கள் வழங்குவது தொடர்பாக ஆலோசிக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை தென்னிந்தியத் - திருச்சபைப்பேராயர் டாக்டர். வி. தேவசகாயம் அவர்கள் குறிப்பேடுகள் செலவினத்திற்கு ரூபாய் 10,000/-வழங்க ஒப்புதல் வழங்கியுள்ளார் எனவும், அடுத்த வருடம் தொண்டு நிறுவனங்களின் கூட்டுக்குழு கூட்டத்தில் பேசப்பட்டதன்படி, ஒரே மாதிரியான குறிப்பேடுகள் எங்கள் திருச்சபையால் நடாத்தப்பட்டு வரும் பள்ளிகளில் உள்ள இந்திய மாணவர்கள் மூலம் முகாம் அகதி மாணவர்களுக்கு வழங்க வைக்கலாம் எனவும் பேராயர் கூறினார் என வண. சாம் கோயில் பிள்ளை அவர்கள் கூறினார்.

### அரசு ஆணைகள்

அரசாணைகள் பெறுவதற்கு கழகத்தால் எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் தற்போது மாநில அரசின் வரவு செலவுத் திட்டம் தொடர்பாக சட்டசபையில் விவாதிக்கப்பட்டு வருவதாலும் அமைச்சர்களுக்கு அது தொடர்பான வேலைப்பளு இருப்பதாலும் சற்றுத் தாமதமாகலாம். இருந்தும் விரைவாகக் கிடைத்து விடும் என என். எஸ். முருகேசு அவர்கள் கூறினார்.

### கல்லூரி மாணவர்களுக்கான நிதிஉதவி வழங்கல்

இக்கல்வியாண்டில் கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவி விபரங்கள் சமர்ப்பிக்கும்படி கோரியிருந்தபையால் சென்னை மண்டலம் தவிர ஏனைய மண்டலங்கள் விபரங்கள் சமர்ப்பித்துள்ளன. சென்னை மண்டலம் விரைவாக விபரப்பட்டியல் வழங்குவதாகக் கூறப் பட்டது.

### 10ம் 12ம் வகுப்பு மாணவர்களுக்கான விசேடப் பயிற்சி வழங்கல்

JRS நிறுவனத்தால் வழங்கப்பட இருக்கும் 10ம் 12ம் வகுப்பு மாணவர்களுக்கான விசேட பயிற்சிச் செலவுவிபரம் சென்னை மண்டலம் தவிர அனைத்து மண்டலங்களும் வழங்கியுள்ளன எனக் கூறப்பட்டபோது சென்னை மண்டலத்தில் தற்போதுதான் முன்னேற்றம் காணப்படுவதாக பொருளாளர் அவர்கள் கூறினார்.

### 12ம் வகுப்பு மாணவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் மற்றும் அறிவுரை வழங்கல்

12ம் வகுப்புத் தேர்வு எழுதிய மாணவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் மற்றும் அறிவுரை வழங்கும் நிகழ்ச்சி மே மாதத்தில் நடாத்துவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2002-2003ம் கல்வி ஆண்டில் 10ம் 12ம் வகுப்பு கற்கப் போகும் மாணவர்களுக்கு JRS நிறுவனத்தால் நடத்தப்படவுள்ள விசேடபயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ள திகதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்து அவற்றை தவிர்த்துப் பொருத்தமான திகதிகளை மண்டலப் பொறுப்பாளர்களுடன் கலந்து தெரிவு செய்யலாம் என ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### தமிழ்நாடு அறக்கட்டளை நிறுவனம் வழங்கும் கணனிப் பயிற்சி

தமிழ்நாடு அறக்கட்டளை நிறுவனம் வழங்கும் கணனிப் பயிற்சி ஜூன் மாதத்தில் நடாத்தலாம் எனவும் அதற்கான ஒப்புதலை அந்நிறுவனத்திடம் பெற வேண்டும் எனவும் அதனை திருமதி ரெ. பிறிஜ்ஜெட் அவர்கள் பெற்றுத் தருவதாகவும் கூறினார். பயிற்சி பெற விரும்பும் மாணவர்களின் பட்டியல்களை கழகத் தலைமை அலுவலக கல்விப்பகுதி தயாரிப்பதற்கு மண்டலங்கள் உடன் விபரங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் நெல்லை மற்றும் திருச்சி மண்டலங்கள் மதுரையில் கணனிப் பயிற்சி பெறுவதற்கு பொருத்தமான வசதிகள் பற்றிய அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறு பொருளாளர் அவர்கள் கேட்டுக் கொண்டார். கடந்த வருடத்தைத் தவிர ஏனைய முந்தைய வருடங்களில் தமிழ்நாடு அறக்கட்டளையால் வழங்கப்பட்ட பயிற்சிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் இதுவரை வழங்காமல் உள்ளமையால் அவற்றை அமெரிக்கநாட்டு தூதுவப் பிரதிநிதி அவர்களைப் பிரதம விருந்தினராக அழைத்து தமிழ்நாடு அறக்கட்டளை நிறுவன நிர்வாகிகள் முன்னிலையில் வழங்கலாம் என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### கல்லூரிக் கல்வியை நிறைவு செய்தவர்களுக்கான பயிற்சி

கல்லூரிக் கல்வியை நிறைவு செய்த பட்டதாரி மாணவர்களுக்கு வழங்குவதற்கான பயிற்சித்திட்டங்கள் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும், மாணவர்களின் விபரங்களை மண்டலங்கள் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

### தனிப்பயிற்சிக் கட்டணம்

தனிப்பயிற்சிக் கட்டணம் வழங்குவது தொடர்பாகப் பேசப்பட்ட போது தவிர்க்க முடியாத காரணத்தினால் கல்வியை இடை நிறுத்திய மாணவர்கள் மீளவும் தனிப் பயிற்சி பெற்று 10,12ம் வகுப்பு அரச பரீட்சைக்குதோற்றி அனைத்து பாடங்களிலும் சித்தியடையும் பட்சத்தில் மட்டுமே கழகப்பொது முடிவின்படி தனிப் பயிற்சி பெற்றதற்கான கட்டணம் பாடம் ஒன்றுக்கு ரூபா 150 வீதம் வழங

(12-ம் பக்கம் பார்க்க)

# ஈழஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் மகளிர் தினச் சிறப்பு விழா

இந்நிகழ்ச்சியானது தமிழ்த்தாய் வாழ்த்துடன் மாலை 5-30 மணியளவில் ஆரம்பமானது. இவ்விழாவை ஒருங்கிணைத்து நாடத்திய செல்வி தேன்மொழி 1999ம் ஆண்டு கொண்டாடிய மகளிர் தின விழாவில் செயலாளர் ஆரம்பித்து சிறப்பித்தமையையும் தெரிவித்தார். கழக இணைப் பொருளாளர் திருமதி அகிலா வரவேற்புரை வழங்கினார். பின் பெண்மையின் சிறப்பைச் சொல்லும் வகையில் செல்வி சுபாசினி உரையாற்றினார். அவர்கூறுகையில் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற பண்புகளை பெண்மைக்கு இலக்கணமாக வைத்திருந்த காலம் மாறிஇன்று அச்சமா? அப்படி என்றால் என்ன? நாணமா? அது எந்தக்கடையில் விற்கின்றார்கள்? என்று கேட்கும் நிலை வந்து விட்டது. அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற நிலை மாறி ஆகாயத்திற்கும் சென்று சாதனை படைத்துவிட்டோம் நாம்.

''ஆயிரம் தந்தையர்க்குச் சமம் ஒரு தாய்''. 'ஆண்களுக்கு புஜத்திலே பலம், பெண்களுக்கு மனத்திலே பலம்'' என்கிறது அமெரிக்கப் பழமொழி. ஏன்! கடவுளே நம்மைப் படைக்கும் போது ஓர் அரிய வரத்தை கொடுத்து மேன்மையாகப் படைத்துள்ளார் எப்படியெனின் தாய்மை என்னும் வரப் பிரசாதத்தை அளித்து மறு படைப்பை அதாவது நமது மறு சந்ததியைப் பெருக்கக் கூடிய சிறப்பைத் தந்துள்ளார். இத்தகைய பெருமைகள் மிக்க பெண்களாகப்பிறந்திட மாதவம் செய்திட வேண்டும் என்று மகாகவி பாரதியாரே சொல்லியுள்ளார். எனவே இத்தகைய சிறப்பு மிக்க நாம் நம் அலுவலக பணியிலும் ஆண்களுக்கு எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை உணர்த்தும்படிநம்சேவையை திறம்படச் செய்கின்றோம். செய்வோம் எனக்கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து ஈழ நாட்டின் ஒரு பகுதியான மட்டு நகரின் அழகிய வளத்தை நடனம் மூலம் திருமதி செல்வமலரால் பயிற்றுவிக்கப்பட்ட குழுவினர்செல்விகள் சுபாசினி, சுலோச்சனா ஆகியோரால் நடனமாடிக் காண்பிக்கப்பட்டது. ஈழ நாட்டின் சிந்தனை எழுந்துவிட்ட உணர்வு போல் எம் பெண் மணிகள் முகத்தில் புதிய களை பூண்டிருந்ததை காண முடிந்தது.

அடுத்தபடியாக சக்காரியாஸ் உரையாற்றுகையில் பெண்என்பவளை ஒருபோகப் பொருளாகவே கருதுகின்றனர். அந்நிலை மாற வேண்டும் ஒரு பெண்ணுக்கு பிரச்சினை என்றால் உலகத்தில் அனைத்துப் பெண்களும் கொதித்தெழுந்து போராட வேண்டும். மகாத்மா காந்தியடிகள் கூறியது போல் என்றைக்கு ஒரு பெண் கழுத்து நிறைய நகைகளைப் போட்டுக் கொண்டு தனியாகவரும் நிலை விரைவில் வரவேண்டும் அந்நிலையைப்பெண்கள் தான் உருவாக்க வேண்டும். தானும் பெண்ணியவாதியாகவே இருக்க விரும்புவதாகவும்கூறி தனதுஉரையை முடித்துக் கொண்டார்.

பின் திருமதி கௌரி மாணிக்கவாசகர் ஒழுங்கு செய்த 'மந்திரக்காரண்டி' என்ற பாடலுக்கு ஓர் அழகிய நடனத்தை செல்விகள் மேனகா, சுபாசினி, கோகிலா ஆகியோர் ஆடி அனைவரையும் மகிழ்வித்தனர்.

அதனைத் தொடர்ந்து செல்வி. மேகலா விக்னேஷ் பெண்கள் அனைவரின் சிந்தனைகளையும் தூண்டும் வகையில் தங்கமான தமிழ்க் கவிதையை விருந்து படைத்தார்.

## பெண்

''சிந்தித்துப்பார் பெண்ணே
சிந்தித்துப்பார்
பாரதி சொன்னான்
பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த
வந்தோம் என்று-ஆனால்
இன்று எத்தனையோ
பெண்கள்
தங்கள் உரிமைக்காக
போராட வேண்டிய அவல
நிலை
சிந்தித்துப்பார் பெண்ணே
சிந்தித்துப்பார்
பெண் உரிமை பெண் உரிமை
என்பதை நிறுத்திவிடு
நம் உரிமை நம் கையில்
இருக்க
மற்றவரிடம் தேடுவதேன்?
ஜான்சிராணியும் பெண்தான்?
கஸ்தூரிபாயும் பெண்தான்
இன்று விண்ணில் பறக்கும்
கல்பனாவும் பெண்தான்
இவர்கள் யாரும் உரிமையை
யாரிடமும் கேட்கவுமில்லை
தேடவுமில்லை
உரிமையை உன்னிடம் தேடு
கிடைக்க வேண்டியஉரிமை
நிச்சயம் கிடைக்கும்
சிந்தித்துப்பார் பெண்ணே
சிந்தித்துப்பார்
நாமும் சிறகில்லா
சிட்டுக்குருவிகள்தான்
அடிமை என்ற கூட்டை விட்டு
வெளியே பறந்து வா
உலகம் பரந்து விரிந்து
கிடக்கும் நமக்காக,
இன்னும் பெண் உரிமையை
பற்றிச் சிந்திக்காமல்
பெண் முன்னேற்றத்தை
சிந்தித்துப்பார்
சாதிக்க வேண்டும் என்ற
வேகம் பிறக்கும் உனக்கு
நூறு ஆண்டுகள்
பின்னோக்கிச் சென்றுபார்
அன்று தேவையானதுதான்
பெண் உரிமை இன்று
நம் உரிமைகள் கையிலிருக்க
முன்னேற்றத்தை நோக்கி
நடை போடு
சிந்தித்து பார் பெண்ணே
சிந்தித்துப்பார்
இன்று நாம் கொண்டாடும்
இந்த நன்னாளோ
நம் முன்னேற்றத்திற்குக்
கிடைத்த அங்கீகாரம்
என்றுதான்
நான் நினைக்கின்றேன்
ஆம் நீங்களும் அப்படித்
தானே?
பெண்ணாய்ப் பிறப்பதற்கே
நல்ல
மாதவஞ் செய்திட
வேண்டுமம்மா
என்றான் கவிஞன்
பெண்ணாய்ப் பிறந்ததை
எண்ணிப்
பெருமை கொள்
சிறுமை கொள்ளாதே
பெண்ணை தெய்வமாக
வழிபடுவது இந்த சமுதாயம்
தான்
துச்சமாக எண்ணி
தூற்றுவதும்
இந்தச் சமுதாயந்தான்
புகழைக் கண்டு மயங்கி
விடாதே
தோல்வியைக் கண்டு
துவண்டு விடாதே
என்றும் நீ நீயாக இரு
வெற்றி நிச்சயம் உனக்கு''

தொடர்ந்து செல்வி. சுலோச்சனா இலங்கை மூதாட்டியாகத் தோற்றம் கொண்டு நடித்து அனைவரையும் வாய்விட்டுச் சிரிக்க வைத்து விட்டுச் சென்றார்.

பின்னர் நடேசலிங்கம் உரையாற்றுகையில் அன்னை தெரேசா, ஜான்சிராணி போன்றவர்களைப் பெண் சாதனையாளர்களாக முன் வைத்துப் பார்ப்பதைவிட நம் அருகிலேயே கண்முன் இருக்கும் எத்தனையோ தியாகப் பெண்களைக் காணலாம். அவர்களையே முன் உதாரணமாக வைத்துக் கொள்ளலாம். திறமைகளைக் காட்ட வேண்டும். ஏனெனில், 100 M (male)ஐ கட்டலாம், 2F (female)ஐ கட்ட முடியாது என்று தமது நகைச்சுவை உணர்வின் மூலம அரிய கருத்தை தெரிவித்துக்கொண்டார். இந்த நிகழ்ச்சியின் தடனங்கள் நம்மை தாயகத்திற்கு ஒரு முறை கூட்டிச் சென்று விட்டு வந்ததை மகிழ்ச்சி பொங்க தெரிவித்து கொண்டு தமது உரையை முடித்துக் கொண்டார்.

மேலும் செல்வி வளர்மதி 1999ம் ஆண்டிற்குப்பின் 2002ம் ஆண்டு மகளிர் தின விழாவை சிறப்பாகக் கொண்டாடுகிறோம்என நினைக்கும் போது பெருமிதம் அடைவதாகவும் நமது அலுவலகத்தில் கூட மூன்றில் இரண்டு பங்கு பெண்கள்தான் பணியாற்றுகின்றோம் என்பதை நினைவிற்கொண்டு வந்துவிட்டு தொடர்ந்து இந்நிகழ்சியை நடத்த ஊக்கம்அளித்த கௌரவத் தலைவர், பொருளாளர், செயலாளர் அவர்களுக்கும் சுபா. பூங்குன்றன் சக்காரியாஸ், நடேசலிங்கம் அவர்களுக்கும் கழகத்தின் சேவையாளர்களில் மூன்றில் இரண்டு பங்காக இருக்கும் மகளிருக்கும், மண்டல அலுவலகத் தொண்டர்கள் அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்ததுடன் இரவு 7-30 மணியளவில் கூட்டம்இனிதே நிறைவடைந்தது.

# இலக்கியப் பாலம்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

களும் ஏற்புரை நிகழ்த்தினார்கள்.

விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்த நற்பணிப் பேரவையின் தலைவர் சமூக ஜோதி எம்.ஏ. இரபிக் வரவேற்புரை ஆற்றினார். நன்றியுரை முடியஎல்லா உரையும் அதில் அடங்கி விட்டது.

ஆனால், அறிமுகப்படுத்திய ஆசிரியர்களைப் பற்றியோ, அவர்களின் நூல்களைப் பற்றியோ யாரும் பேசவில்லை! சிறப்பு விருந்தினர்களுக்கும் பேச வாய்ப்பு அளிக்கவில்லை; அதற்காக நடந்த விழா தானே இது? எனக்குமட்டுமாவது வாய்ப்புக் கொடுத்திருந்தால், ஆசிரியர்களைப்பற்றியும், அவர்களின் நூல்களைப் பற்றியும் விளக்கமாக, ஆனால் சுருக்கமாக எடுத்துக் கூறியிருப்பேன்!

விழாவின் முடிவில்அனைவருக்கும் அறுசுவை விருந்து அளிக்கப்பட்டது. கறி பிரியாணி, கோழி பொரியல், மாசி, வட்டலப்பம் என்று திருமண விருந்து போலிருந்தது! உபசரிப்பதிலும் புரவலர் உயர்ந்து நின்றார்!

விழா முடிந்தபின் 2 நாள் கண்டிக்கும், நுவரேலியாவுக்கும் சுற்றுலா சென்றோம். வரலாற்றுச் சிறப்புமிக்க புத்தர் பல் கோவில் (கண்டி), சீதையம்மன் கோவில் (நுவரேலியா) முதலிய இடங்களைக் கண்டுகளிக்கும் நல் வாய்ப்பு நம் ஆசிரியர்களுக்குக் கிடைத்தது. நானும் அய்யூப் உடன் சென்று அவர்களைச் சிறந்த முறையில் கவனித்துக் கொண்டோம்.

ஆசிரியர்கள் ஊர் திரும்புவதற்கு முதல் நாள் இரவு புரவலர் தனது வீட்டில் அவர்களுக்கு விருந்து கொடுத்தார் பல இதழாளர்கள் வந்திருந்தார்கள். இலங்கை நயினாரும் கலந்து கொண்டார். இலங்கையில் புகழ் பெற்ற இடியாப்பம், புட்டு, சொதி, சம்பல் போன்ற உணவுகளை சுவைக்கும் வாய்ப்பு ஆசிரியர்களுக்குக் கிடைத்தது. (இதற்கு முன்பு புரவலரின் நண்பர் ஹாஜி யூனுஸ் அவர்களும் ஆசிரியர்களுக்கு ஒரு சுவையான விருந்து கொடுத்திருந்தார்.)

மறக்க முடியாத இனிய நினைவுகளுடன் ஆசிரியர்கள் ஊர் திரும்பினார்கள்.

இலக்கியப்பாலம் அமைக்கும் இந்தப் பணி தொடர வேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால் அது ஒரு வழிப் பாதையாக இருக்கக் கூடாது! இலங்கை எழுத்தாளர்களையும் தமிழ் நாட்டுக்கு அழைத்துச் சிறப்பிக்க வேண்டும். அந்த முயற்சியை எங்கள் உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் மேற்கொள்ளும்!

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும். இத்தனிப்பயிற்சிக் கட்டணம் சித்தியடைந்ததற்கான மதிப்பெண் பட்டியல் பெற்ற மூன்று மாதங்களுக்குள் அவ்வுதவியைப் பெற்றுவிட வேண்டும். தவறின் உதவி வழங்கப்படமாட்டாது. ஆனால் பள்ளி மூலம் 10, 12ம் வகுப்பு அரச பரீட்சைக்கு தோற்றி சித்தியடையாத பாடங்களுக்கு மீளத் தோற்றி சித்தியடையும் பட்சத்தில் தனிப்பயிற்சிக்கட்டணம் கழகப் பொது முடிவின்படி வழங்க முடியாது என்ற முடிவினை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் 8ம் வகுப்புக்கான தனிப் பயிற்சிக் கட்டணம் வழங்கப்படமாட்டாதெனவும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

### 10, 12ம் வகுப்பு விசேட பயிற்சிக் கட்டணம் வழங்கல்

2001-2002 கல்வியாண்டு 10, 12ம் வகுப்பு விசேட பயிற்சிக் கட்டணம் கழகம் பொறுப்பேற்ற மாவட்டங்களில் வழங்கி விட்டதாகவும், இயேசு சபை அகதிகள் சேவை நிறுவனம் பொறுப்பேற்ற மாவட்டங்களில் வழங்க துரித நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மண்டலப் பொறுப்பாளர்கள் கூறினார்கள்.

இறுதியாக வண. சாம்கோயில்பிள்ளை அவர்கள் கூட்டத்துக்கு வருகை தந்திருந்த அனைவருக்கும் நன்றி கூறினார்.

அடுத்த கூட்டம் மே மாதம் 3ந் திகதி நடத்தலாம் என முடிவு செய்யப்பட்டது.

குறிப்பு: சா. செல்வநாயகம்

தொகுப்பு: எஃ.என். முருகேசு

PUBLIC LIBRARY

புலிகள் இயக்கம்

# தலதா மாளிகை தாக்குதலுக்கு பௌத்த மக்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்

### பீக்கு தியவதன நிலமே வேண்டுகோள்

தலதா மாளிகையை தாக்கி சேதப்படுத்தியமைக் காக விடுதலைப்புலிகள் உலக பௌத்த மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என தலதா மாளிகையின் தியவதனநிலமே நிரஞ்சன் விஜயரட்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் ஆனந்தசங்கரி தலதா மாளிகைக்கு சென்று வழிபட்ட போது அவரைச் சந்தித்து உரையாடியபோதே தியவதன நிலமே மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

தலதா மாளிகைக்கு விஜயம் செய்த யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவருமான வி. ஆனந்தசங்கரியை தலதா மாளிகையின் தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரட்ன வரவேற்றார்.

பின் அவருடன் தனது அலுவலகத்தில் வைத்துஉரையாடினார் இதன்போது அவர் தெரிவித்ததாவது:

1998ம் ஆண்டு ஜனவரி 25ம் திகதி விடுதலைப்புலிகள் தலதா மாளிகையை குண்டு வீசித் தாக்கி சேதப் படுத்தியமை வேதனைக் குரிய விடயமாகும். இதற்காக விடுதலைப் புலிகள் உலக பௌத்த மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும்.

அதே வேளை வடக்கிலுள்ள பல பௌத்த வழிபாட்டுத் தலங்கள் தாக்கி சேதப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை புனரமைக்க நடவடிக்கை எடுப்பதோடு அவ்வாறான ஒரு தாக்குதல் சம்பவம் மீண்டுமொருமுறை ஏற்படாத வண்ணம் பாதுகாப்பு வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்ளும் தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரட்னவிற்கு வி. ஆநந்தசங்கரி பதிலளித்துப் பேசுகையில்

இந்நாட்டில் இன மத வேறுபாடுகளின்றி அனைவரும் சரிசமமாக வாழ வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். இதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என தெரிவித்தார்.

# பெண்களைப் பாதிக்கும் வரவு-செலவுத் திட்டம்

-அஞ்சான் உம்மா

இலங்கைப் பெண்கள் இன்று பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றும் பெண்களுக்கு இந்த வரவு செலவுத்திட்டம் எவ்வித சலுகைகளையும் வழங்கவில்லை என்று ஜே.வி.பி. கம்பஹா மாவட்ட எம்.பி. அஞ்சான் உம்மா சபையில் விசனம் தெரிவித்தார்.

மகளிர் விவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்:

பெண்களுக்கு கல்வி, சுகாதார வசதிகளை இந்த அரசாங்கம் உரிய முறையில் பெற்றுக்கொடுக்க வில்லை.

இன்று நாட்டின் முன்னேற்றத்தில் பெண்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். ஆனால் அவர்கள் புறக்கணிக்கப் படுகின்றனர், மகளிருக்குரிய சலுகைகள் அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை. வரவு செலவுத் திட்டத்தில் பெண்களுக்கு சாதகமான எந்த விதமான திட்டங்களோ சலுகைகளோ இல்லை.

பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இது பெண்களை பாதிக்கும், போஷாக்கின்மை போன்ற சுகாதார சீர்கேடுகளை பெண்கள் எதிர்நோக்குகின்றனர்.

எமது பெண்கள் சகல துறைகளில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கல்வி வசதிகளற்ற பெண்கள் அதிகம். அதேபோல் போக்குவரத்து சேவைகளிலும் பெண்கள் பெரிதும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். இந்த பிரச்சினைக்கெல்லாம் மகளிர் விவகார அமைச்சு என்ன தீர்வை முன் வைத்துள்ளது என்று கேள்வியெழுப்ப விரும்புகிறேன்.

யுத்தச் சூழ் நிலையிலும்

# வடகிழக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்கு பெரும் சேவை

### மாவை சேனாதிராஜா எம்.பி. புகழாரம்

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் யாழில் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றன. பல கோடி ரூபா நட்டத்தில் இயங்கும் இச்சங்கங்களை பார்வையிட கூட்டுறவு அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவேண்டுமென்று யாழ். மாவட்ட த.வி.கூ. பாராளுமன்றஉறுப்பினர் மாவை சேனாதி ராஜா கோரிக்கை விடுத்தார்.

வரவு செலவுத் திட்டத்தில் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டுபேசிய அவர்மேலும் தெரிவித்ததாவது:

கடந்த சில வாரங்களுக்கு முன் இளைஞர் விவகார அமைச்சர் யாழுக்கு விஜயம் செய்த போது சில விளையாட்டு உபகரணங்களை வழங்கியிருந்தார். இதற்கு நாங்கள் அவருக்கு நன்றி கூறுகின்றோம்.

யாழில் வேலையற்ற பட்டதாரிகள் பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில் யுத்த சூழ்நிலையிலும் வடக்கு கிழக்கில் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர்.

கூட்டுறவுச் சங்கங்கள் யாழில் நாசமடைந்துள்ளன. யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ் கூட்டுறவு சங்கங்கள் பெரும் சேவைகளைச் செய்துள்ளன. தெல்லிப்பளை கூட்டுறவுச் சங்கத்தின் 35 மில்லியன் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன.

அதேபோல புலோலி 31 மில்லியன், ஊர்காவற்றுறை 10 மில்லியன், மானிப்பாய் 16 மில்லியன், வேலணை 7 மில்லியன் என்று இப்பட்டியல் நீற்கின்றது. இவைகளுக்கு இதுவரை எந்தவித மான நட்டஈடும் கிடைக்கவில்லை. இவ்வாறு பல நட்டங்களை வடக்கில் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்குகின்றன. எனவே கூட்டுறவு அமைச்சர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அல்லது விடயங்களை நேரில் அவதானிக்க அமைச்சர் யாழுக்கு விஜயம் செய்ய வேண்டும்.

கொழும்பிலிருந்து யாழ். செல்ல

# போக்குவரத்து அனுமதிகள் இன்னும் வழங்கவில்லை

### புனர்வாழ்வு அமைச்சு தகவல்

கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே பஸ் சேவை நடத்துவதற்கு தனியாருக்கு அனுமதி வழங்கப்படும் போது பாதை மூடப்படுவதற்கு முன்பு சேவை நடத்தியவர்களுக்கே முன்னுரிமை வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது.

தற்போது 150 இற்கு மேற்பட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே பஸ்சேவை நடத்துவதற்கு அமைதி தருமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

எனினும் அவ்வாறு அனுமதி வழங்குவதற்கு முன்பு தமது ஆலோசனையை பெறுமாறு புனர்வாழ்வு மீள் குடியேற்ற அகதிகள் விவகார அமைச்சு தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இதேவேளை தற்போது சில தனியார் பஸ் உரிமையாளர்கள் 300ரூபா, 400ரூபா என தாம் விரும்பியவாறு கட்டணங்களை அறிவிக்கின்றார்கள். ஆனால் பஸ் கட்டணம் தொடர்பாக பாதை பற்றி கவனத்திற்கொண்டு பொருத்தமான ஒரு கட்டணத்தை சகலரும் அறவிட நடவடிக்கை எடுப்பது பற்றி புனர்வாழ்வு அமைச்சு ஆராய்ந்து வருகின்றது.

இந்த விடயங்களில் இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் தம்மிடம் இல்லையென்ற போதும் உரிய அறிவுறுத்தல்களை தாம் வழங்குவது அவசியம்என்று அமைச்சு தெரிவிக்கின்றது.

இதே வேளை சில பஸ் உரிமையாளர்கள் தமது சேவை இடம் பெறுமெனக் கூறி ஆசனப்பதிவுகளையும் மேற்கொண்டுள்ள போதும் இதுவரை கொழும்பில் இருந்து நேரடியாக யாழ்ப்பாணம் செல்வதற்கான போக்குவரத்துப்பாதை அனுமதிகள் எத்தரப்பில் இருந்தும் அவர்களுக்குகிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# த.வி.கூ. இரட்டை வேடம் போடலாமா? தமிழ்க் காங்.எம்.பி. குமரகுருபரன் தாக்கு

### பாராளுமன்றத்தில் தமிழ் எம்.பி.க்கள் முரண்பாடு

பாராளுமன்றப் பாதுகாப்பு அமைச்சு குழு நிலை விவாதம் குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் கருத்து முரண்பாடு எழுந்துள்ளது.

தேசிய கூட்டமைப்பு பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு தொடர்பான குழு நிலை விவாதத்தை வாக்கெடுப்பிற்கு விட வேண்டும் எனக் கோருவது. ஆனால் வாக்கெடுப்பில் கலந்து கொள்வதில்லையென கூட்டணி எம்.பி.க்கள் தீர்மானித்தனர். ஆனால் கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட எம்.பி.யும் ரெலோ இயக்கத்தின் பொதுச்செயலாளருமான சிவாஜிலிங்கம், அகில இலங்கைத் தமிழர் காங்கிரசு எம்.பி. கஜேந்திரகுமார் ஆகிய இருவரும் இதனை வன்மையாக எதிர்த்தனர்.

விவாதத்தை வாக்கெடுப்பிற்கு விட வேண்டும் எனக் கோரினால் அதனை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் அல்லது வாக்கெடுப்பைக் கோருவதில் அர்த்தமில்லையென வாதிட்டுள்ளனர். இதனால் கருத்து முரண்பாடும் சர்ச்சையும் ஆரம்பித்தது.

பாதுகாப்பு அமைச்சு தொடர்பான விவாத வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் எதிர்த்தே வாக்களிக்கும் என அதன் பொது செயலாளர் கலாநிதிகுமரகுருபரன் தெரிவித்தார்.

வாக்கெடுப்பொன்றை கோரி விட்டு அதில் கலந்து கொள்ளாமல் இருக்க முற்படுவது இரட்டை வேடம்போடும் நடவடிக்கை என்றும் அவர் விபரித்தார்.

# கவிதைச் சரம்

## சங்கத் தமிழ் அமுதம்!

கவிமாமணி டாக்டர்
ச. ஆறுமுகநாதன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

என்றுமே அவன் வேண்டி
இருக்கின்ற போதினிலே
குன்றத்து வேடர்களால்
குறிதவறி விரட்டுவித்த
வேழமொன்று நாங்கள்
இருக்குமிடம் விரைந்துவர
அழுது புரண்டு அந்த
நம்பி அண்டை சென்று
நின்றோம் அவ்விளைஞன்
நேராக அம்பெய்து
வென்றான் வேழத்தை
விரட்டுவித்தான் அதன்
பின்னே
நடுங்கியுமே நின்றிருந்த
நம்தலைவி பேரழகைத்
தொடர்ந்து பாராட்டி
தோகையே உனைஎன்றன்
இல்லக் கிழத்தியாக
ஏற்றுக் கொள்வேன்
என்றேதான்
மனையுறை தெய்வத்தின்
மாண்பான முன்னிலையில்
உறுதியுமே கூறி
உயர் அருவி நீர் அள்ளி
அருந்தியே அன்புடனே
ஆணையிட்டுக்
கொடுத்திட்டான்
இந்நிகழ்ச்சி முடிவதற்குள்
எழில் மாலைக் காலம்வர
அந்த நம்பி எங்களுக்கு
அருந்துணையாய் உடன்
வந்து
ஊர்புறம் சேர்த்துவிட்டு
உடன் மறைந்து சென்று
விட்டான்
சீர்மிகுந்த குடியினிலே
திருவுடனே பிறந்த அவன்
தலைவியினைத் தழுவுதற்கு
தான்முடியா திருந்திடினும்
மலையாமல் நான்தவறா
மகிழ்ந்து வந்துசெல்கின்றான்
நள்ளிரவும் வருகின்றான்
நல்லொழுக்க மிகவுடையான்
பள்ளமுடன் மேட்டினையும்
பயன்மிகுந்த காட்டினையும்
கல்லிடரும் ஆற்றினையும்
கடந்துவரல் நன்றன்று
சொல்லியிதைத் தலைவியுமே
துயரத்தில் வாடுகின்றாள்
இதுதான் அவள்
கொண்டிருக்கும்
இதயநோய் எனத்தோழி
புதுமைகண்டு செவிலித்தாய்
புரிந்திடுக என்றாளே
இப்படியாய் இந்நூலை
இயற்றுவித்த ஆசிரியர்
ஒப்பில்லா இயற்கை செய்யும்
உயர் நிகழ்வைப் படம்
போன்று
எழுதியுமே காட்டி
இதயத்தைக் கவருகின்ற
முழுமுயற்சி தனிலொன்றை
முக்கியமாய்ப்
பார்த்திடுவோம்

(தொடரும்)

## பூரண விடியலுக்கு பொறுப்போடு காத்திருப்போம்!

தமிழீழதாசன்

அமைதி திரும்பியது
அன்னையகம் செல்வோமென்று
அவசரப்படாதே-தோழா
அவசரப் படாதே!

போர்நிறுத்தம் வந்ததென்று
புரிந்துணர்வு உடன்பாடென்று
புளக மடையாதே-தோழா
புளகமடையாதே!

முன்புந்தான் போர்நிறுத்தம்
முகிழ்த்து வந்தனை
முற்றாக மறந்திடாதே-தோழா
முற்றாக மறந்திடாதே!

அன்றும் சந்திரிகா
அரவணைத்து மகிழ்ந்தனை
அகங்கொள்ளத் தவறிடாதே-தோழா
அகங்கொள்ளத் தவறிடாதே!

இன்றும் விக்கிரமசிங்கா
இறங்கி வருகிறார் என்று
ஏமாந்து போகாதே--தோழா
ஏமாந்து போகாதே!

எஸ்.எல்.எவ்.பியும்
யு.என்.பி.கட்சியும்
இனவாதம் விட்டதுண்டோ--தோழா
இனவாதம் விட்டதுண்டோ?

ஆட்சியைப் பிடித்திடத்
தமிழரைப் பகடையாய்
ஆக்க மறந்ததுண்டோ-இவை
ஆக்க மறந்ததுண்டோ?

செய்த ஒப்பந்தங்களைச்
செயலிலே கொண்டுவரத்
திட்டமிட்ட துண்டோ-இவை
திட்டமிட்ட துண்டோ?

மலையகத் தமிழரை
நாடற்றோர் ஆக்கி
வதைத்த கதைகொஞ்சமோ-கொடுமை
வரலாற்றில் இதைமிஞ்சுமோ?

முசுலிம்கள் தமிழர்கள்
மோதலை உருவாக்கி
முரண்பாட்டை வளர்க்கவில்லையா-இன்றும்
முட்டுக்கட்டை போடவில்லையா?

சிங்கம்சைவ மானதென்று
புலி நம்பலாம் ஆனால்
செம்மறிகள் நம்பலாமா-நம்பித்
திரும்பத் திரும்ப வெம்பலாமா?

குளோனிங் முறைமூலம்
நோர்வே செய்த புதுமை இதென்று
கூறலாம் உண்மையாகட்டும்-நடைமுறை
கூடிவந்து நன்மையாகட்டும்!

நடக்கட்டும் பேச்சுவார்த்தை
நாட்டட்டும் ஒரு தீர்வு
நடைமுறைக்கு அதுவரட்டும்-தோழா
நடைமுறைக்கு அதுவரட்டும்!

நிரந்தரமாய் சமாதானம்
நிலைத்ததைக் கண்டபின்பு
நீ அங்கு திரும்பல் நன்று-தோழா
நீ அங்கு திரும்பல் நன்று!

அங்குமின்றி இங்குமின்றி
அலைவதைத் தவிர்த்திடு
ஆசைக்கு இரையாகாதே-தோழா
ஆசைக்கு இரையாகாதே!

அகதி வாழ்க்கை ஒரேயடியாய்
அகலும் நாள் வரும் வரைக்கும்
அடக்கத்தைக் கடைப்பிடிப்பாய்-தோழா
அடக்கத்தைக் கடைப்பிடிப்பாய்!

மின்மினியை விளக்கென்று
கருதாமல் விடியலுக்கு
விருப்போடு காத்திருப்போம்-தோழா
விருப்போடு காத்திருப்போம்

பொன்னுதயம் கண்டபின்பு
புதுமலர்ச்சி நிகழ்ந்தபின்பு
பொறுப்போடு சென்றடைவோம்-தோழா
புது-வாழ்க்கை அன்றடைவோம்!

## தந்தை செல்வா

மண்ணில் உயிர்கள் மறைந்து விட்டால்
மூச்சுக்காற்றும் பிஞ்சுவதில்லை!-இது
பிரபஞ்சத்தைக் கெஞ்சுவதில்லை!
ஆயிரம் அவதாரம் பூமியில் வரலாம்,
ஏன் ஆதிவாழ்வே பூமி பெறலாம்!

மாண்டவர் மீண்டு வந்தால் ஆண்டவன் எதற்கு என
சங்கடத்துடன் இசைக்கிறேன்,
மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு
மீண்டும் ஒரு செல்வாவின் பிறப்பை நோக்கி!

தந்தையின் இதயம் மலரல்ல வாடிவிட!
தென்றல் அல்ல விட்டுச்செல்ல மேகமல்ல கலைந்துவிட
தேனல்ல திகட்டிவிட!-ஆம்
இவரின் இதயம் சுவாசக்காற்று
என்றும் வற்றாத பாச ஊற்று!

அவை குண்டின் உரசல்களுக்கிடையே
ஈழத்தை எரித்துவிட நினைத்தவர்களிடமிருந்து
தீக்குச்சியின் உரசலைக் கூட ஈழம் காணக்
கூடாது என ஈழத்தை மீட்டுவிட நினைத்தவர் தந்தை!

உடன்பாட்டிற்கு கையெழுத்திட்டு
முரண்பாட்டிற்கு வழிவகுத்த
ஆட்சியை எதிர்த்தவர் தந்தை!
ஈழ சுதந்திரமே அவர் சிந்தை!

தீட்டிவிடப்பட்ட கத்தி முனையில்
மாட்டி விடப்பட்ட தமிழர்களை
ஈழத் தந்தையின் ஆன்மாவின் அறைகூவல்
விடுதலை செய்தது!

தொட்டி மீன்களாய் அடங்கிக் கிடந்த
தமிழர்களைத் தட்டிக் கொடுத்துப்
பகையை வெட்டியெறிய ஊக்கம் கொடுத்து
ஏக்கங்களை போக்கியவர் தந்தை!

ச. சரோகராஜ்
அழியாநிலை, அறந்தாங்கி, புதுகை.

## ஒருமுறை தந்தையே திருமுகம் காட்டுக!

தமிழமுதன் பவானிசாகர்

என் இதயம் வருடிய காற்றைக் கேட்டு உலகம் அழுகிறது
இந்த காற்றில் தழுவிய மூச்சைக்கேட்டு தேசம் கலங்கியது!
மூங்கில் குழலில் எழுந்த காற்றும் கவிதையாகியது!
வானத்தில் நீந்தும் மேகமும் உருகி வீழ்கிறது!
பேசிக் களைத்த நெஞ்சமே-ஒரு
மாலை சூடி நிற்பதேன்?
தந்தை செல்வா உள்ளமே-தமிழ்த்
தேசம் விட்டு போனதேன்? ஆ-ஆ-ஆ-ஆ (என்)

சரணம்

தேசம் விடிவை நோக்கிப் போக தந்தை உள்ளம்
கசிந்ததே!
காற்றும் மூங்கில் துண்டாய் முறிந்ததே!
இதய வானம் விரிந்தபோதும் வெள்ளி முளைக்கலையே!
மேசையெங்கும் தட்டியபோதும் விடிவு கிடைக்கலையே!
கத்திக் கத்தி தொண்டைத் தண்ணீர்வற்ற எங்கள் உரிமை
கேட்டீரே!
குட்டிக் குட்டி எங்கள் நெஞ்சமெல்லாம் அவன் வெறுமை
விதைத்தானே!
யுத்தத்தின் மத்தியிலும் இரத்தத்தைக் கண்டோம்
எனினும் விடிவு இல்லை!
விடிவு கிடைத்திடுமா?...அமைதி நிலவிடுமா?
தந்தையே நீர் ஒருமுறை திருமுகம் காட்டும்! (என்)

உமது வழியை நோக்கிப் போக மைந்தன் உள்ளம்
எழுந்ததே!
வீசும் காற்றும் விலகிப் போக அகதிச்சேவை நிமிர்ந்ததே
உலகம் யாவும் விடிந்தபோதும் ஈழம் விடியலையே!
விழிகள் யாவும் அழுதபோதும் அவதி முடியலையே!
சுற்றிச் சுற்றி வேலை தேடியற்ற எங்கள் இளமை
அழிகிறதே
தத்தித் தத்தி அன்னை மண்ணைப்பற்ற எங்கள் இதயம்
துடிக்கிறதே!
துவேசத்தின் மத்தியிலும் பேச்சுக்குரல் கேட்டோம்
எனினும் விடிவு இல்லை!
விடிவு கிடைத்திடுமா? அமைதி நிலவிடுமா?
தந்தையே நீர் ஒருமுறை திருமுகம் காட்டும்! (என்)

# தந்தை செல்வா



த. சபாரத்தினம்

## டட்லி-செல்வா ஒப்பந்தம்

1965 மார்ச் 22 தேர்தலில் தமிழரசுக் கட்சி 20 தொகுதிகளில் போட்டியிட்டது. 14 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

மொத்தம் 217, 986 வாக்குகள் கிடைத்தன. நாடளாவிய ரீதியில் தேர்தல் முடிவுகள் இவ்வாறு அமைந்தன.

யு.என்.பி. 66, எஸ்.எல்.எவ்.பி.-41, எல்.எஸ்.எஸ்.பி-10.

கம்யூனிஸ்ட் கட்சி-5, தமிழரசு-14, தமிழ்க்காங்கிரஸ்-3 ஏனையோர்-5 மொத்தம் 151 எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

லேக் ஹவுஸ் எடிட்டோரியல் டிரக்டர் எஸ். மொண்ட் விக்கிரமசிங்க யு.என்.பி.யின் ஆலோசகராக இருந்தார்.

தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், எம்.ஈ.பி. தகநாயக்காவின் கட்சி ஆகியவற்றைச் சேர்த்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்குமாறு யு.என்.பி.த் தலைவர் டட்லி சேனநாயக்காவுக்கு ஆலோசனை சொன்னார். அவ் ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மார்ச் 23இல் அவர் டாக்டர் நாகநாதனுக்கு டெலிபோன் செய்தார். அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக செல்வாவை டட்லி சந்திக்க விரும்புகிறார் என்றார்.

மார்ச் 24இல் தமிழரசுத் தலைவர்கள் கொழும்புக்கு விமானம் மூலம் வந்தனர்.

தமிழரசுத் தலைவர்கள் கொழும்புக்கு வருவதற்கு முன்பு தேவையான ஆயத்த வேலைகள் செய்யப்பட்டு விட்டன.

தந்தை செல்வா தன் வீட்டுக்குப் போனதும் விக்கிரமசிங்கா அவரைப் போய்ப் பார்த்தார்.

விக்கிரமசிங்கா தந்தை செல்வாவின் கீழ் வழக்கறிஞர் தொழில் பழகியவர். எனவே அவரிடம் தந்தை செல்வா நேரடியாகச் சொன்னார். 'உதவி தேவைப்படும் போது உதவியைப் பெற்றுவிட்டு பின்பு கைவிடுவது சிங்களத் தலைவர்களின் வழக்கம். இப்பொழுதும் அதையே செய்ய மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?' என்று கேட்டார்.

'இந்த முறை அப்படி நடக்காது என்று நான் உத்தரவாதமளிக்கின்றேன்' என்றார் விக்கிரமசிங்க.

'இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் நீங்கள் அக்கறை கொண்டுள்ளீர்கள் என்பதையிட்டு நான் என்னைத் திருப்தியடையச் செய்ய வேண்டும்' என்று தந்தை சொன்னார்.

விக்கிரம டட்லீயின் சார்பில் பேசத் தகுதி பெற்றுள்ளார் என்பதை உறுதிப்படுத்திய பின் தமிழரின் முக்கிய நான்கு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண டட்லி உதவுவாரா என்று கேட்டார்.

## அங்கம் 40

அதற்குரிய உத்தரவாதத்தை தந்தையிடம் விக்கிரமசிங்க கொடுத்தார்.

அவர் கிளப்பிய நான்கு பிரச்சினைகளும் இவைதான்.

1. மொழிப் பிரச்சினை: தமிழ்மொழி வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக இருத்தல் வேண்டும்.

2. நீதிமன்ற மொழி: வடக்கு கிழக்கு மாகாணங்களில் நீதி மன்றங்கள் தமிழ் மொழியில் இயங்கவேண்டும்.

3. மாவட்ட சபைகள் நிறுவப்பட வேண்டும். அவற்றின் அதிகாரங்களை யு.என்.பி. தமிழரசுக் கட்சித்தலைவர்கள் பேசி முடிவு செய்ய வேண்டும்.

4. குடியேற்றப் பிரச்சினையும் தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினையும்: தமிழ் பேசும்மக்கள் பெரும்பான்மையினராக வதியும் பகுதிகள் சிங்களவர் மயமாக்கப்படலாகாது.

### டட்லி-செல்வா சந்திப்பு

இந்த நான்கு விடயங்களிலும் தீர்வு காண விக்கிரமசிங்கா இணங்கியதன் பின்பு தான் டட்லி தந்தை செல்வா சந்திப்பு டாக்டர் எம்.வி.பி. பீரிசின் வீட்டில் இடம் பெற்றது.

தந்தை செல்வாவுடன் நாகநாதன், இராசமாணிக்கம், திருச்செல்வம், வி. நவரத்தினம் ஆகியோர் பேச்சில் கலந்து கொண்டனர்.

டட்லிக்கு ஜெயவர்த்தன, சுகதாச, விக்கிரமசிங்க ஆகியோர் உதவினர்.

முதல் மூன்று விடயங்களிலும் அதிகம் விவாதம் இடம் பெறவில்லை. குடியேற்றத் திட்டம் பற்றிய விடயத்துக்கு வந்ததும் டட்லி இணங்க மறுத்தார். 'எமது மக்கள் காணிக்கு எங்கே போவது?' என்று கேட்டார். ஆனால், இறுதியில் இரண்டு பகுதியினரும் ஏற்றுக் கொள்ளும் திட்டமொன்று வகுக்கப்பட்டது.

தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினையை நிர்வாக நடவடிக்கையினால் தீர்த்து வைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. நேரம் நள்ளிரவை நெருங்கி விட்டது.

டெலிபோன் மணி ஒலித்தது.

டாக்டர் பீரிஸ் டெலிபோன் எடுத்தவருடன் பேசிவிட்டுத் திரும்பி வந்து 'கவர்னர் ஜெனரலைச் சந்திக்க திருமதி பண்டாரநாயக்கா போய்க் கொண்டிருக்கிறார். தமிழரசுக்கட்சியினர் தன்னை ஆதரிக்கப் போவதாகக் கூறப் போகிறாராம்' என்று சொன்னார்.

டட்லி தந்தை செல்வாவைப் பார்த்தார்.

'திருமதி பண்டார நாயக்காவை ஆதரிப்பதாகச் சொன்னீர்களோ' என்று கேட்டார்.

நாகநாதன் அதை வன்மையாக மறுத்தார்.

'நான் எத்தகைய கடிதமும் திருமதி பண்டார நாயக்காவுக்குக் கொடுக்கவில்லை' என்று தந்தை உறுதியளித்தார். அந்த டெலிபோன் கோல் டட்லியை ஓரளவு அதிர்ச்சியடையச் செய்து விட்டது, தமிழரசுக் கட்சி ஸ்ரீமாவை ஆதரித்தால் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை அமைக்கும் வாய்ப்பு இருந்தது டட்லிக்குத் தெரியாததல்ல, எப்படியாவது சுதந்திரக் கட்சியினர் ஆட்சி அமைப்பதைத் தடுப்பதில் அவர் குறியாக இருந்தார்.

டட்லியையும் பார்க்க விக்கிரமசிங்கவுக்குச் சுதந்திரக் கட்சி மறுபடியும் ஆட்சி அமைப்பதைத் தடுப்பதில் அதிக அக்கறை இருந்தது.

ஸ்ரீமாவோ அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு அவர் எடுத்த அத்தனை முயற்சியும் வீணாக அவர் அனுமதிப்பாரா?

'தமிழ்ப் பிரதேசங்களில் இனிமேல் சிங்களக் குடியேற்றம் இடம்பெற அனுமதியோம்' என்ற வாக்குறுதியை விக்கிரமசிங்கவே கொடுத்தார். அத்துடன் நிற்கவில்லை. டட்லியும் தந்தை செல்வாவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் வாசகத்தை விக்கிரமசிங்கவும், வி. நவரத்தினமும் சேர்ந்து தயாரித்தனர். நவரத்தினம் எடுத்த குறிப்புகளை அடிப்படையாக வைத்தே அவ்வாசகம் தயாரிக்கப்பட்டது.

விக்கிரமசிங்கவே தன் கையால் ஒப்பந்த வாசகத்தை 'டைப்' செய்தார். மூன்று பிரதிகளை டைப் செய்தார். ஒன்றை டட்லி வாசித்தார். மற்றதைத் தந்தை வாசித்தார்.

அடுத்து இருவரும் கையொப்பமிட்டு திகதியையும் போட்டனர். டட்லீ தான் எழுந்து ஒரு பிரதியைத் தந்தையிடம் கொடுத்தார் தந்தை எழுந்து நின்று அதை வாங்கினார். அந்த ஒப்பந்தத்தின் வாசகம் இது தான்-



'ஈழத்தமிழர் தொன்மை' நூலின் முதற்படியை ச. முத்துக்குமரனிடமிருந்து பெற்றுக் கொள்கிறார் ஈ.ஏ.ம. கழகச் செயலாளர் செல்வி சூரியகுமாரி, திருமதி மணிமேகலைக்கண்ணன், முனைவர் அரு. கோபாலன் உடன் உள்ளனர்.

### ஒப்பந்த வாசகம்

திரு. டட்லிசேனநாயக்கா அவர்களும், எஸ் ஜே.வி. செல்வநாயகம் அவர்களும் 24-3-1965 ஆம் திகதி சந்தித்துத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக நடாத்திய பேச்சுவார்த்தைகளுக்கமைய ஒரு நிரந்தர அரசாங்கத்தை அமைக்கும் நிமித்தம்-கீழ்க் குறிப்பிட்டுள்ளனவற்றிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று திரு. சேனநாயக்கா ஒப்புக் கொள்கிறார்.

1. வடகிழக்கு மாகாணங்களில் தமிழில் நிர்வாகம் நடப்பதற்கும், அவற்றைத் தமிழிலேயே பதிவதற்கும், தமிழ் மொழி விசேட விதிகளுக்கமைய உடனே நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒரு தமிழ் பேசும் குடிமகன் நாடு முழுவதிலும் தமிழிலேயே காரியமாற்ற உரிமையுள்ளவன் என்பதே-தன் கட்சியின் கொள்கை என்பதையும் திரு. சேனநாயக்கா விளக்கினார்.

2 வடகிழக்கு மாகாணங்களிலுள்ள சட்ட பூர்வ நடவடிக்கைகளை நடாத்தவும், அவற்றைப் பதிவதற்குத் தமிழ் நீதிமன்ற மொழியாக இருப்பதுதான் கட்சியின் கொள்கை என்று திரு. சேனநாயக்கா ஏற்றுக் கொள்கிறார்.

3. இரண்டு தலைவர்களின் பரஸ்பர சம்மதத்தின் பேரில் மக்கள் பாலுள்ள அதிகாரங்களுக்கேற்ப இலங்கையில் மாவட்ட சபைகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் தேசிய நன்மை கருதி சட்டங்களுக்கு அமைய மாவட்ட சபைகளுக்கு மேலான அதிகாரங்கள் அரசாங்கத்துக்குண்டென்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

4. இலங்கைப் பிரஜைகள் காணிப் பங்கீடுகளில் காணிபெறும் வண்ணம் காணி அபிவிருத்தி விதிகள் திருத்தியமைக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களில் காணிகள் வழங்கப்படும் போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கீழ்க்காணும் விடயங்கள் முதன் முறையாகக் கவனிக்கப்படும் எனவும் திரு. சேனநாயக்கா ஏற்றுக் கொண்டார்.

அ. வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள் அம் மாகாணங்களிலுள்ள காணியற்றவர்களுக்கே முதலில் வழங்கப்படல் வேண்டும்.

ஆ இரண்டாவதாகவட கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கே வழங்கப்படல் வேண்டும்.

இ மூன்றாவதாக இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ள தமிழ் பேசும் இனத்தவர்களுக்கே முதலிடங் கொடுத்து ஏனையவர்களுக்கும் வழங்கலாம்.

(ஒப்பம்) டட்லி சேனநாயக்கா.

24-03-1965

(ஒப்பம்) எஸ். ஜே. வி. செல்வநாயகம்

24-03-1965

(தொடரும்)

# விக்கிரமசிங்க திட்டம் என்ன?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குடியுரிமை உறுதி செய்யப்பட வேண்டும்

இந்த நிலைப்பாட்டில் ஊசலாட்டம் காணப்படக் கூடாது என்பதே ஈழத் தமிழ் மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாகும்.

1985ல் இந்தியா முன்னிலையில் இந்த நிலைப்பாடு எடுக்கப்பட்டபோதே இன்றைய சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மாமனார்-முன்னாள் அதிபர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் சகோதரர்-அன்று சிங்கள மக்கள் சார்பில் திம்புப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட எஸ்.டபிள்யூ.ஜெயவர்த்தன அதைக் கடுமையாக எதிர்த்தார். அதே மனப்பான்மைதான் இன்று ரணிலிடமும் எதிரொலிப்பதாகத் தெரிகிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத-மக்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்படாதஒரு அமைப்பு, தமிழ் மக்களின் சார்பில் இந்த மனப்பான்மை கொண்ட ரணிலுடன் பேசி ஒரு இடைக்கால அரசை அமைக்கக் கோருவது, அதன் மூலம் அமைதியைக்கொண்டு வருவது என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு எதிரானதாகும்.

ஏனெனில், மேற்கண்ட நிலைப்பாடு சாத்தியமானது தான் என்பது 1987ல் செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை உடன்பாட்டின் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டு, அது தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகம் என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்டு, அவ்வொப்பந்தத்தின் கீழ் தற்காலிகத் தமிழ் மாகாண அரசும் ஏற்படுத்தப் பட்டது ''அந்த அரசில் தாங்கள் மட்டுமே இருக்க வேண்டும். மற்றத் தமிழ் அமைப்புகள் இடம் பெறக் கூடாது'' என்று புலிகள் மேற்கொண்ட நிலைப்பாட்டால்தான் அது குலைந்து போனது.

இதைப் பயன்படுத்திக் கொண்டு அன்றைய அதிபர் ஜே. ஆர். ஜெயவர்த்தன தமிழர் தாயகத்திற்குப் பாதுகாவலாக நின்ற இந்தியப் படைகளை வெளியேறச் சொல்ல, அன்றையப் பிரதமர் பிரேமதாச தந்திரமாக இந்தியப் படைகளையும் புலிகளையும் மோதவிட்டு அதற்கான பின்னணியை உருவாக்கி அடுத்த ஜனாதிபதியாகத்தான் வருவதற்கான தளம் அமைத்துக் கொண்டார்.

இந்திய அமைதிப் படையினர் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்து கொண்டார்கள் என்ற வாதம் சரியென்றாலும் கூட ஈழத் தமிழர்களுக்கு அன்று இந்தியாவில் இருந்த நட்புச் சூழ்நிலையில் அந்தப் படையினரைப் பாசறைகளுக்குள் இருக்கச் செய்யும்படி கேட்டிருந்தால் இந்தியா அதைச் செய்திருக்கும். இந்திய அமைதிப்படை வெளியேறாமல் இருந்திருந்தால் சிங்களப் படை மீண்டும் ஈழப் பகுதிக்குள் நுழைந்திருக்காது.

இன்னும் சொன்னால் இந்தியப்படை அங்கிருந்த தன் விளைவாக சிறீலங்கா அரசின் திட்டமிட்ட குடியேற்றத்தால் வடக்குக் கிழக்கில்-தமிழர் தாயகத்தில் ஊடுருவிய தென்னிலங்கைச் சிங்களவர்கள் கூடத் தாங்களாகவே தெற்கிற்குக் குடி பெயர்ந்து செல்லும் காட்சியும் அன்று உருவாகியது.

இந்திய அமைதிப்படை வெளியேற்றத்திற்குப் புலிகளை உபயோகித்துக் கொண்ட பிரேமதாசா, அதன் பிறகு தான் யார் என்பதை காட்டத் தவறவில்லை. ஏனென்றால், 1989ல் பிரேமதாசாவுடன் புலிகள் நடத்திய பேச்சுவார்த்தை முறிந்ததன் விளைவாகவே போர் தீவிரமானது.

பிறகு 1995ல் ஆட்சிக்கு வந்தசந்திரிகா (Confederation) கூட்டிணைப்பாட்சி தருவதாகச் சொன்னார். அப்போதும், இடைக்கால ஆட்சியை தங்கள் கையில் மட்டுமே தரும்படி புலிகள் கேட்டதற்கு அவர் இணங்காமையினாலேயே பேச்சுவார்த்தை முறிந்து போனது. போர் முன்னைவிட உக்கிரமாக நடைபெறலானது.

அடுத்து, இதே நார்வே நாட்டு முயற்சியால் 1999ல் மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெற்ற போதும் இந்த இடைக்கால அரசு பற்றிய பிரச்சினையில்தான் முறிந்து போனது. போர் மேலும் தீவிரமானது.

ஆக, இந்த இடைக்கால அரசு என்கிற பிரச்சினை தான் இதுவரை நிலக்கண்ணிவெடியாக இருந்து பேச்சு வார்த்தைகளை முறித்துள்ளது என்பது கண்கூடாகத் தெரிகிறது.


ஆனால், ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மேலே கண்ட நான்கு கூறுகள் தான் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு அடிப்படைகளாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். இவற்றுக்கமைய ரணில் விக்கிரமசிங்க ஒரு தீர்வுத்திட்டத்தை முன் வைக்க வேண்டும்.

புலிகளுடைய தனி நலன்களா? ஒட்டு மொத்தத் தமிழ் மக்களுடைய பொது நன்மையா? என்று பார்த்தால் இரண்டும் ஒன்றல்ல. தங்களுடைய பிரச்சினை தீர்ந்தால் மட்டுமே மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பது நியாயத்துக்குப் புறம்பானது.

ஆகவே, ஒட்டு மொத்தத் தமிழ் மக்களுடைய எதிர் காலத்தை முன்னிருத்தி, அவர்கள் ஏற்கெனவே அளித்துள்ள தீர்ப்பை மனதிற் கொண்டு, இப்போது ஏற்பட்டிருக்கும் அமைதியை நிரந்தரமாக்குவதற்கான மாற்றுத் திட்டத்தை உருவாக்குவதற்கு நார்வே மத்தியஸ்தக் குழுவினரும், சிறீலங்கா அரசும், புலிகளும் உரிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

புலிகளை மட்டுமே மனதிற்கொண்டு இந்திய அரசும், தமிழக அரசும் இதில் பாராமுகமாக இருக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு, ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் தனது அறிக்கையில் கூறியுள்ளது.



ஈழத்துக் காந்தியின் திருவுருவச் சிலையை முத்தமிழ்க் காவலர் மகள் திருமதி மணிமேகலைக்கண்ணன் திறந்து வைக்கிறார்.

## கடந்த அரசிலும் கஷ்டம் புதிய அரசிலும் கஷ்டம்

### தமிழ் மக்களுக்கு விடிவு கிடையாதா? ஆனந்தசங்கரி எம்.பி. சாடல்

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தோற்றுவிக்கப்பட்ட மாகாண சபை முறை இன்று அப்பிரச்சினையைத் தீர்க்க எவ்விதத்திலும் உதவாத நிலைமையே காணப்படுகின்றது. துரதிருஷ்டவசமாக வடக்கு-கிழக்கு பகுதிகளில் மாகாண சபைகள் இல்லை. எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அந்தநோக்கத்தை நிறைவேற்றமாகாண சபைகள் முன் வர வேண்டும் அத்துடன் மிகப் பழைய முறைகளான கிராம சபைகள் பட்டின சபைகள் ஆகியவற்றை அமுல் செய்ய அமைச்சு முன்வர வேண்டுமென்று த.வி.கூ. எம்,பி. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்ட உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் பேசிய அவர் மேலும் கூறியதாவது:

நாங்கள் இந்த நாட்டில் முன்னர் பல சிறந்த நிகழ்ச்சித் திட்டங்களை கொண்டிருந்தோம். கிராம சபை கிராம மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கியது. நான் இரணதீவு கிராம சபையின் தவிசாளராக கடமையாற்றினேன். எனது அரசியல் வாழ்க்கை அங்குதான் ஆரம்பமானது. அது ஒரு பயிற்சிக் களமாகக் காணப்பட்டது. எமது அரசியல்வாதிகள் இச் சபையில் பயிற்சி பெற்றிருந்தால் எத்தனையோ பிரச்சினைகளைத் தீர்த்திருக்கலாம்.

எனவே கிராம சபை, பட்டின சபை போன்றபழைய முறைகளை அமைச்சர் மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டும். இந்த விடயத்தில் சிரத்தை கொண்டு மீண்டும் பழைய முறைகளை அறிமுகம் செய்யுங்கள்.

மாகாண சபை பற்றி அதிகம் கூறத் தேவையில்லை வடக்கு-கிழக்கில் மாகாண சபை இல்லை. மாகாணசபை உருவாக்கம் ஒரு வெள்ளை யானையைத் தோற்றுவித்திருக்கின்றது. எதற்காக ஆக்கப்பட்டதோ அப்பிரச்சினைகளைத் தீர்க்க மாகாண சபைகள் முன்வரவேண்டும்.

கடந்த கால அரசாங்கத்தில் எமது மக்கள் கஷ்டப்பட்டனர். ஆனால் புதிய அரசாங்கத்திலும் இது தொடர்கின்றது. ஆயுதம் ஏந்திய குழு ஒன்று யாழில் அட்டகாசங்களைத் தொடர்ந்து செய்துக் கொண்டிருக்கின்றது. இது குறித்து அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்.

## நீடூழி வாழ்க!

**(திருச்சி மண்டல 19ம் ஆண்டு நிறைவுவிழா 01-05-2002)**

''தெள்ளிய ஆலன் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவியாட் பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலாகும்மே'' என்ற
அதிவீரராம பாண்டியன் கூற்றுக்கமைய
ஆல்போல் பரந்து படர்ந்து பலவகை
நிழல் தந்ததோடு அருகு போல் வேரூன்றி
நிற்கும் கழகம்
நீடூழி வளர்க! இனிது வாழ்க !!

க. தனபாலசங்கம்
திருச்சி அலுவலகம்

Edited, Printed, Published and Owned by ARUNACHALAM GOPALAN, APT. F-17, 5th Floor, P.A. Towars, 33, Halls Road, Egmore, Chennai-8
Printed at Kuralneri Achagam, 4/77, Subathar Garden, Choolaimedu, Chennai-94.

சன நாயகம்-சமதர்மம்-சமய சார்பின்மை-நமது பாதை